தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1

மஞ்சரி -01

நேரம்: 45 நிமிடம்

பெயர் : .....

புள்ளிகள் :


முதலில் தரப்பட்ட உருவை ஒத்த உருவை தெரிந்து கோடிடுக.


01. 


1) 


2) 

3) 

02. 

1) 


2) 


3) 

3ஆம், 4ஆம் வினாக்களுக்கு கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவை தெரிவு செய்க


03.


T	E	A
S	U	N
H	E	N







.....

1) 

2) 

3) 


04. 






.....

1) 


2) 


3) 


05. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

2	6	10
6	10	14
10	14	.....

1) 16 2) 20 3) 18

06. 

1) 

2) 

3) 

.....

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி



Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

07. உருளை ஒன்றை செய்வதற்கு தேவையான தளவடிவங்கள் எவை?

1)  2)  3) 

08. பஞ்சு, கம்பளி, சங்கு , தகுதி தரப்பட்ட நான்கு சொற்களிலும் உள்ள ஒவ்வொரு எழுத்தைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சொல் எது?

1) சுத்தம் 2) திக்கம் 3) தஞ்சம்

09. கவிதாவின் வயது 9 வருடங்கள் ஆகும். அவளது தாயின் வயது கவிதாவின் வயதின் 4 மடங்காகும். கவிதாவின் தாயை விட தந்தை மூன்று வருடங்கள் மூத்தவர். தந்தையின் வயது யாது ?

1) 36வருடங்கள் 2) 41 வருடங்கள் 3) 39 வருடங்கள்

பின்வரும் கட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு 10ஆம் , 11ஆம் வினாக்களுக்கு விடையை தெரிந்து கோடிடுக.

✍ எட்டு	⊷ - அடைப்பினுள்
➢ - சுட்டெண்ணை	✈ - உறங்குங்கள்
✉ - படியுங்கள்	✪ - உங்கள்
❖ -மணித்தியாலம்	✻ - பெயரை
◆ - எழுதுங்கள்	● - தினமும்

10. அறிவுரை ஒன்றை காட்டும் குறியீட்டு வரிசையை தெரிவு செய்க.

1) ✪✻⊷✉ 2) ● ✍❖ ✈ 3) ●✉❖✈

11. அறிவுறுத்தல் ஒன்றை காட்டும் குறியீட்டு வரிசையை தெரிவு செய்க,

1) ✪ ➢ ⊷ ◆ 2) ✪ ➢ ❖ ◆ 3) ✪ ✉ ➢ ◆

12.

3	2	3	8	18
4	3	1	A	12
5	2	3	10	B
8	1	4	13	32

பின்வரும் கோலத்திற்கு ஏற்ப A,B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்கள் முறையே யாவை ?

1) 8 , 30
2) 12 , 20
3) 10 , 15

13ஆம் , 14ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூட்டை பயன்படுத்தி சரியான விடையின் கீழ் கோடிடுக.

✪ + ✪ = 18 ✪ - 3 = ✡ ✡ x 2 = ✷

13. ✷ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1) 12 2) 6 3) 7

14. ✡+ ✪ + ✷ இன் பெறுமானம் யாது?

1) 27 2) 36 3) 24

15. 100 தொடக்கம் 120 வரையான **இரட்டை எண்களை** எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

1) 12 2) 18 3) 16

www.lkedu.lk

16. வெற்றிடத்திற்கு வரவேண்டிய கணித செய்கை குறியீடுகளை தெரிந்து கோடிடுக.

12 ..... 3 ..... 2 = 30 1) +,x 2) - , x 3) - , ÷

17. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.


இலங்கை ..... பக்கமும் கடலால் சூழப்பட்ட ..... ஆகும்.

1) நான்கு , தீவு 2) மூன்று , குடா 3) நான்கு , கண்டம்.

18. 96 முட்டைகளில் ¼ பங்கு எத்தனை முட்டைகள்?

1) 36 2) 24 3) 64

19. உருவில் உள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?



1) 48 2) 55 3) 62

20. போத்தல் ஒன்றினுள் 850ml நீர் உள்ளது. போத்தலினுள் மேலும் 750ml நீரை கவனமாக ஊற்றும் போது 100ml நீர் போத்தலில் இருந்து வெளியேறியது. எனின் போத்தல் கொள்ளும் நீரின் அளவு யாது?

1) 2l 2) 1.5l 3) 2.5l

❖ **கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

21. மழைநாள் ஒன்றில் காணக்கூடியது,

1) வெள்ளம் ஓடும் வீதிகள் 2) தெளிவான வானம் 3) வாடிவதங்கிய பயிர்கள்

22. நேற்று புதன்கிழமை எனின் நாளை மறுநாள் என்ன கிழமை?

1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை

23.

✡ + 6 = 19
✡ - 5 = 8

✡ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1) 13 2) 15 3) 11

24. கவசம் என்னும் சொல்லுக்கு பொருத்தமான குறியீட்டை தெரிவு செய்க.

1) ✡○□✡ 2) ♓♈♉♊ 3) ♍☯☯■

❖ **கீழ் தரப்பட்டுள்ள உருக்களின் பெறுமதிகளை கொண்டு 21ஆம், 22ஆம் வினாக்களுக்குரிய விடையை தெரிவு செய்க.**

●+●= 34 ■+ ●= 26 ✚x ■ = 27

25. ✚ இவ்வுருவின் பெறுமதி யாது?

1) 3 2) 9 3) 4




26. ●+ ■ +✚ க்கு பொருத்தமான பெறுமதி யாது?

1) 25 2) 31 3) 29

27. 3,6,5ஆகிய மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமான மூன்று இலக்கங்களை கொண்ட எத்தனை எண்கள் எழுதலாம்?

1) 6 2) 3 3) 7

28. செங்கோணம் உள்ள உருவை தெரிவு செய்க.

1)  2)  3) 

29. 0.3 பங்கு நிழற்றப்பட்ட உருவை தெரிக

1)  2)  3) 

www.ikedu.lk

30. தவறான முறையில் நேரம் குறிக்கப்பட்டிருக்கும் கடிகார முகத்தை தெரிவு செய்க.

1) 
2) 
3) 

31. நீர்த்தாங்கி ஒன்றில் இருந்து நிமிடத்திற்கு 50ml நீர் கசிந்து வெளியேறுகின்றது. தாங்கியிலிருந்து 30 நிமிடத்தில் வெளியேறும் நீரின் அளவு யாது?

1) 150ml 2) 1150ml 3) 1500ml

32. அட்டவதானி எனப்படுபவர்


1) ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்க கூடியவர்
2) பிறர் நலனை கருத்தில் கொண்டு வாழ்பவர்
3) நகைச்சுவையாக கவிபுனையும் ஆற்றல் உடையவர்

33. நூதனசாலை என்பது,

1) பொருட்கள், பண்டங்கள் சேமித்து வைக்குமிடம்
2) பழமை வாய்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைக்குமிடம்.
3) பொருட்கள் உற்பத்தி செய்யும் இடம்.

34. நிமலியின் அப்பா எனது அம்மாவின் தம்பி எனின் நிமலியின் அப்பா எனக்கு என்ன உறவு முறை?

1) சிற்றப்பா 2) மாமா 3) பெரியப்பா

35. 

அடைப்பினுள் சமஅளவில் காணப்படும் உருக்கள் எவை

1)  2)  3) 

❖ **37ஆம், 38ஆம் வினாக்களில் அடுத்து வரும் சொல்லை கண்டுபிடித்து கோடிடுக.**


36. அருவம் → உருவம் → பருவம் → ☐



1) வடிவம் 2) புருவம் 3) அரும்பு

37. தம்பதி → பதிகம் → கம்பளி → ☐

1) பம்பரம் 2) கும்பம் 3) பளிங்கு


38. உருவை பூரணப்படுத்த தேவையான பகுதியை தெரிவு செய்க.



1)  2)  3) 

39. வெற்று அடைப்புக்கு பொருத்தமான உருவை தெரிவு செய்க.

1)  2)  3) 



40. பாடசாலை ஒன்றில் 368 மாணவர்கள் கற்கின்றனர். அவர்களில் 173 பேர் பெண்கள் எனின் பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?

1) 186 2) 195 3) 174

(2½x40=100புள்ளிகள்)

www.ilearn.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

பெயர் : .....

மஞ்சரி - 01

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

(01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க

ஓர் அன்னாசிப்பழம் வாள்போன்ற தனது தலைமயிரை உலுப்பியவாறு பேசத்தொடங்கியது. நான் பார்ப்பதற்கு கடுமையான தோற்றமுடையவன். ஆனால் எனது உள்ளமோ மென்மையானது. நான் மிகவும் இனிமையானவன். நல்ல குணங்களைக் கொண்டவன் என்னைச் சாப்பிட்டால் உங்கள் உடல் உறுதியும், உற்சாகமும் பெறும் என்றது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01. தோற்றமுடையவன் என்ற சொல்லை பிரித்தெழுதுக? .....

02. அன்னாசிப்பழத்தின் உள்ளம் எத்தகையது? .....

03. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக? .....

04. மென்மையானது என்ற சொல்லின் எதிர்ச்சொல்லை எழுதுக? .....

05. உடம்பு என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தருக? .....

06. அன்னாசிப்பழத்தை உண்பதால் கிடைக்கும் பயன்கள் எவை? .....

(06புள்ளிகள்)

(02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

01. செய்திகளைத் திரட்டித் தருபவரை ..... (நிருபர், நிறுபர்) என்று அழைக்கின்றோம்.

02. கடுகு சிறிதானாலும்..... (காறம், காரம்) பெரிது.

(02புள்ளிகள்)

(03) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

01. இருபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா .....

02. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை .....

03. மா, வாழை, பலா என்பன .....

(06புள்ளிகள்)

(04) தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. பரிதி -: (மதி, திங்கள், ஞாயிறு, உடு)

02. உண்மை :- (பொய், வாய்மை, பொல்லாப்பு, நேர்மை)

03. சுத்தம் :- (புனிதம், மாசி, அசுத்தம், சுகம்)

(03புள்ளிகள்)

(05) பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

01. கண்ணே எழுந்திடுவாய்
கண் மணியே கண்மலர்வாய்
சின்னஞ்சிறு மலரே
.....

02. அல்லும் பகலும் நல்ல
.....
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்.

(04புள்ளிகள்)

(06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் **தமிழில் எழுதுக.**

01. *Please sit down* .....

02. *Listen to me please* ..... (02புள்ளிகள்)

www.ikeau.lk

(07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி **ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

01. உங்கள் பெற்றோருக்கு கூறுங்கள் .....

(02புள்ளிகள்)

(08) ஒவ்வொருபடத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப்பெயரை **ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

01.  ..... *02.*  .....

(02புள்ளிகள்)

(09) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை **தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

01. ஆசிரியர் வருவாரா .....

(10) பின்வரும் வாக்கியத்தின் **கருத்தை தமிழில் எழுதுக.** (02புள்ளிகள்)

01. மல்லித் எக்க யமு .....

(02புள்ளிகள்)

(11) பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ்கோடிடுக.

01. விளையாடுவதற்கு மைதானம் எனின் படிப்பதற்கு ..... (புத்தகம் , பாடசாலை)

02. மகன் எப்பொழுதும் தந்தையிலும் ..... குறைந்தவனாக இருப்பான் (உயரம் , வயது)

03. தேயிலை பயிரிடப்படும் இடங்களைத் ..... (தோட்டம் , தோட்டங்கள்) என அழைப்பர்.

04. நானும் நீயும் ..... (பாடினேன் , பாடினோம்) (04புள்ளிகள்)

(12) நீர் என்பது இறைவனின் அருள் கொடையாகும். அது நமக்கு பல வழிகளில் கிடைக்கும் அதனை வீண்விரயம் செய்யாது பேணுதல் வேண்டும். "மழையினால் கிடைக்கும் பயன்கள்" பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத்தொடர்புகள் எழுத்துக்கூட்டல் ஆகியன சரியாக இருக்க வேண்டும்.

01. .....

02. .....

03. .....


(13) கணித வினாக்களுக்கு விடை தருக. (06புள்ளிகள்)

01. இலக்கங்களில் எழுதுக. ஏழாயிரத்து ஒன்று .....

02. எண்கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.

3060 , 3075 , 3090 , ... , ...

03.



1) உருவின் சுற்றளவை சென்றிமீற்றரில் தருக? .....

2) உருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? .....

04. பாடசாலையின் மொத்த மாணவர்களின் தொகை 857ஆகும். பெண் மாணவர்களின் எண்ணிக்கை 491 ஆகும். எனின் பாடசாலையில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கை யாது? .....

05. ..... x *இவ் எண்ணுக்கு முன்னுள்ள எண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதுக.*

www.lkedu.lk

06. 410 பலூன்களை ஒரு பைக்கற்றில் 4 வீதம் இட்டு தயாரிக்கத்தக்க பலூன் பைக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது? .....


07. 26 பத்துக்களில் நூறுகள் எத்தனை உள்ளன? .....


08. நீர்கொழும்பில் இருந்து சிலாபத்துக்கு உள்ள தூரம் 40km 750m ஆகும். சிலாபத்தில் இருந்து மங்கள எலியவுக்கு உள்ள தூரம் 32km 150m ஆகும். நீர் கொழும்பில் இருந்து மங்கள எலியுவுக்கு உள்ள தூரம் எவ்வளவு? .....

09.  சிறிய மீன்களின் எண்ணிக்கையை உரோமன் எண்குறிகளில் தருக?

.....

10. ஒரு விழாவின் போது ஒரு பிள்ளைக்கு 5வீதம் 238 மிட்டாய்களைப் பகிர்ந்து கொடுத்த பின்னர், 3மீதமாக இருந்தது. மிட்டாய்களைப் பெற்றுக்கொண்ட பிள்ளைகள் தொகை எவ்வளவு? .....

11.  இவ் உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன? .....

12.  அடைப்பினுள் காணப்படும் முக்கோணிகள் எத்தனை? .....

13. பேருந்து வண்டி ஒன்று ஒரு மணித்தியாலத்தில் 30km வேகத்தில் பயணிக்கும். அது மாறாவேகத்தில் 75 km தூரத்தை அடைவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும். .....

14. 2016ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் சங்கரின் வயது 10ஆண்டுகள் 6 மாதங்களும் ஆகும். சிவாவின் வயது 12ஆண்டுகளும் 7 மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத்தொகையை காண்க?

..... ஆண்டுகள் ..... மாதங்கள்

15.  இவ் உருவில் எத்தனை தட்டையான மேற்பரப்புகள் காணப்படுகின்றன.

..... (32புள்ளிகள்)

(14) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. மூன்று இதழ்கள் உள்ள மலருக்கு உதாரணம்?

1) மல்லிகை 2) வெட்சி 3) போகன்விலா 4) அலரி

02. இலங்கைக்கே உரிய தாவரம்

1) வல்லாரை 2) ஆம்பல் 3) பவளமல்லிகை 4) குப்பைமேனி

03. நின்மீனைக்கொள்வனவு செய்யும் போது கூடியளவு கவனம் செலுத்தப்படவேண்டிய விடயம்?

1) பொருள் விற்கும் கடை 2) பொருளின் வர்த்தகப் பெயர்

3) காலாவதியாகும் திகதி 4) சுற்றியுள்ள லேபல்

04. பயிர்களைச் சேதப்படுத்தும் விலங்கினம்,

1) தும்பி 2) குளவி 3) தேனீ 4) அழுக்கணவன்

05. தீத்தாள் பயன்படுத்தப்படுவது,

1) மட்பாண்டக்கைத்தொழிலில் 2) விவசாயக்கைத்தொழிலில்

3) ஆடைக்கைத்தொழிலில் 4) உலோகக்கைத்தொழிலில்

06. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) நீரில் தேங்காய் எண்ணெய் மிதக்கும் 2) நீரில் பனிக்கட்டி அமிழும்

3) நீரில் இரும்பாணி தாழும் 4) உப்பு நீரில் கரையும்.

07. தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம் அல்லாதது

1) களுத்துறை 2) காலி 3) அம்பலாங்கொடை 4) மாத்தறை

08. பின்வரும் நதிகளுள் ஒரே மாகாணத்தை அண்டியுள்ள கடலில் விழுவன,

1) களனிகங்கை - வளவைகங்கை 2) களனிகங்கை - களுகங்கை

3) நில்வளாகங்கை - மகாவலிகங்கை 4) மகாவலிகங்கை - ஜின்கங்கை

09. துன்கிந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாவட்டம்


1) மொனராகலை 2) புத்தளம் 3) பதுளை 4) கேகாலை

10. துப்பரவு குறைந்த நீரைப் பருகுவதனால் ஏற்படும் நோய்,

1) தடிமன் 2) குக்கல் 3) கூகைக்கட்டு 4) வாந்திபேதி

11. கலாவாவியை கட்டுவித்த மன்னன்,

1) பண்டுகாபயன் 2) மகாசேனன் 3) வசபன் 4) தாதுசேனன்

12.  உருவில் உள்ள உபகரணம்,

1) சாவணம் 2) இடுக்கி

3) துறப்பணம் 4) சீவுளி

13. உடலிற்குத் தேவைப்படும் காபோவைதரேற்றை பெற்றுக்கொள்ள முடிவது,

1) உருளைக்கிழங்கு 2) பருப்பு 3) கரட் 4) வல்லாரை

14. நீரில் அமிழும் பொருள்,


1) கை ஊசி 2) ரெஜிபோம் 3) மெழுகு 4) தேங்காய்

15. குழு விளையாட்டு அல்லாதது,

1) குண்டுபோடுதல் 2) எல்லே அடித்தல் 3) சடுகுடு 4) வொலிபோல்

16. பின்வரும் பிராணிகளுள் தலைவனையும், தலைவியையும் இனங்காணத்தக்க இயல்புகளை கொண்டது,

1) மைனா 2) கொக்கு 3) கோழி 4) மழைக்குருவி


17.  இக்குறியீட்டினால் குறிக்கப்படுவது யாது?

1) இலங்கை மின்சார சபை 2) இலங்கை கட்டளைகள் பணியகம்.

3) மின் விநியோகிக்கும் இடம் 4) சுயாதீன தொலைக்காட்சி

18. இலங்கையில் சனநெரிசல் அதிகமான இடம்

1) கொழும்பு 2) வவுனியா 3) அம்பாந்தோட்டை 4) மன்னார்

19.  உருவில் உள்ள உடுகோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?

1) கலப்பை 2) ஓராயன்

3) பெருநாய் 4) சிறுகரடி

20. வானிலை எதிர்வு கூறல்களுக்கு உதாரணம்,

1) ஆட்காட்டிக்குருவிகள் பறத்தல் 2) பூனை கத்துதல்

3) பல்லி சத்தம் இடுதல் 4) வண்டுகள் இரைதல்.

(30புள்ளிகள்)

www.lkedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1


மஞ்சரி -02

நேரம்: 45 நிமிடம்

பெயர் : .....

புள்ளிகள் :

1,2 ஆகிய வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

01. 

1) 

2) 

3) 

02 

1) 

2) 

3) 

03. ஒரே கருத்தை தரும் சொற்கள் இடம் பெறும் விடையை தெரிவுசெய்க.

1) பனி, கடமை 2) பிரயோசனம், பயன் 3) அலை , புற்று

04. மேமாதம் 1ஆம் திகதி புதன்கிழமை ஆகும். மேமாதம் இறுதிநாள் என்ன கிழமை

1) புதன்கிழமை 2) வெள்ளிக்கிழமை 3) வியாழக்கிழமை

05. 987 , 876 , 765 , ... , 543 கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடை யாது?

1) 456 2) 546 3) 654

06. வரிசை ஒன்றில் கண்ணன் முன்னாலிருந்து கணக்கிடும் போது எட்டாவதாக நிற்கிறான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக நிற்கின்றான். வரிசையில் எத்தனை பேர் நிற்கின்றனர்?

1) 11பேர் 2) 10பேர் 3) 12பேர்


07. 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வருடத்தின் முதல் நாளாகும். ஏப்ரல் 15ஆம் திகதி வருடத்தின் எத்தனையாம் நாளாகும்.?

1) 105 2) 102 3) 106

08. சரியான கோவையை தெரிவு செய்க?

1) 3 x 5 + 8 = 24 2) 9 x 4 - 8 = 26 3) 20 ÷ 4 x 9 = 45

09. இக்கோலத்தில் A,B ஆகியவற்றிற்கு பொருத்தமான எண்கள் முறையே



1) 4,6 2) 3 , 8 3) 5 , 4

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

மஞ்சள் நிறப் பூக்களின் அரைவாசியாகும். மஞ்சள் நிறப்பூக்களும், சிவப்பு நிறப்பூக்களும் சம எண்ணிக்கையில் இருந்தன. கூடையில் உள்ள வெள்ளை நிறப்பூக்கள் எத்தனை?


1) 14 2) 21 3) 28

11. தரப்பட்டுள்ள ஒலிமரபுகளுக்குரிய பிராணிகள் முறையே குறிக்கும் விடையை தெரிவு செய்க.
கனைக்கும் - எக்காளமிடும் - இரையும்.

1) குதிரை, எருமை, வண்டு 2) கழுதை, எருது, தேனீ 3) குதிரை, எருது, நுளம்பு

12. ஆறு நண்பர்கள் தமக்கிடையே தீபாவளி வாழ்த்துக்களை மாறிமாறி அனுப்பி மகிழ்ந்தனர். எனின் அனுப்பப்பட்ட மொத்த வாழ்த்துக்கள் எத்தனை?

1) 36 2) 30 3) 18

13.  உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி

1) ½க்கு சமன் 2) ½இலும் கூடியது 3) ½ இலும் குறைந்தது

14. இலக்கணப்பிழையின்றி எழுதப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க.

1) ஓர் காகம் வடையை தூக்கிச் சென்றது. 2) ஒரு பட்டம் வானில் பறந்தது.
3) ஒரு ஆடு புல் மேய்ந்தது.

15. தொழிற்சாலை ஊதுகுழல் ஒன்று 90 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒலி எழுப்பும். அது மு.ப. 6.30 மணிக்கு முதலாவது மணி எழுப்பியது எனின் மூன்றாவது மணியும், நான்காவது மணியும் எழுப்பும் நேரங்கள் முறையே

1) 8 மணி , 9.30 மணி 2) 9.30 மணி , 11 மணி 3) 8.30 மணி , 10 மணி

16. என்னிடம் உள்ள பணத்தின் மூன்று மடங்கு பணம் அண்ணாவிடம் உள்ளது. அண்ணாவிடம் உள்ள பணத்தின் இரண்டு மடங்கு பணம் அக்காவிடம் உள்ளது. எங்கள் மூவரிடமும் உள்ள மொத்த பணத் தொகை 800ரூபா எனின் அண்ணாவிடம் உள்ள பணத்தொகை யாது?

1) 150ரூபா 2) 300ரூபா 4) 240ரூபா

17. 23:50 கடிகாரம் காட்டும் நேரத்திற்கு கொழும்பு விமான நிலையத்தை வந்தடைய வேண்டிய விமானம் 20 நிமிடங்கள் தாமதித்தே வந்தடைந்தது விமானம் வந்தடைந்த நேரம் யாது?




1) 24:10 2) 12:10 3) 00:10

18. பேருந்து ஒன்றில் 48 பேர் பயணம் செய்தனர். அதில் அரைவாசி பேர் ஆண்கள். மிகுதியில் அரைவாசி பெண்கள். ஏனையோர் சிறுவர்கள். பேருந்தில் பயணம் செய்த சிறுவர்கள் எத்தனை பேர்?

1) 6 பேர் 2) 12 பேர் 3) 8 பேர்

19. முதலில் தரப்பட்டுள்ள உருக்களை ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது தோன்றும் வடிவம் யாது?



1)  2)  3) 

20. கரனை விட விஷால் உயரம் குறைந்தவன் நிமலனை விட கரன் உயரம் குறைந்தவன் இவர்களில் உயரமானவர் யார்?

1) நிமலன் 2) கரன் 3) விஷால்

www.lkedu.lk

21. அதிகமானவர்கள் புத்தகங்களை படிப்பது,


1) அறிவைப்பெற 2) பொழுதுபோக்குக்காக 3) வாசிப்பு திறனை அதிகரிப்பதற்காக

22. 2012ஆம் ஆண்டு 30வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது எனின் 2020ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக்போட்டி நடைபெறும்.?

1) 38வது 2) 32வது 3) 35வது

23. ☐ - 9 + 3 = 10 எனின் வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய எண் யாது?

1) 16 2) 18 3) 15

24. 

எனின் 

..... புள்ளிக்கோட்டில் வரவேண்டிய உருவை தெரிவு செய்க?

1) 

2) 

3) 


25. 1 , 2 , 4 , 7 , ... , ... 22 , 29 , என்ற எண்கோலத்தில் வெற்றுக்கட்டத்தினுள் வரவேண்டிய இரு எண்களும் எவை?

1) 10, 15 2) 11, 16 3) 12, 19


சொற்களுக்குரிய குறியீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

நேற்று	அண்ணா	# சென்றார்	அப்பா	மைதானம்	கொழும்பு	காலையில்

பின்வரும் உருநிரையை குறிக்கும் வாக்கியத்தை எழுதுக.

26.  .....

27.  .....

28. 

-?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய எண் யாது?

1) 9 2) 7 3) 13

29. பொருத்தமற்ற அடைமொழியை கொண்ட வாக்கியத்தை தெரிவு செய்க.

1) நீலவானில் வெண்ணிற பறவைகள் வட்டமிட்டன.

2) மிக உயர்ந்த கட்டடங்கள் கொழும்பு நகரை அழகுபடுத்தின.




3) வைரமான பஞ்சுக்கூட்டம் போல மேகங்கள் திரண்டன.

30. 5ரூபாவிற்கு 10 இனிப்புக்கள் வாங்கலாம் எனின் 16 இனிப்புக்கள் வாங்கத்தேவையான பணத்தொகை யாது?

1) 32ரூபா 2) 8ரூபா 3) 12ரூபா

www.ikedu.lk

31. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் ஒழுங்குமாறி தரப்பட்டுள்ளன. இதனை ஒழுங்குமுறையாக காட்டும் விடையை தெரிவு செய்க.



A 
B 
C 
D 
E 

1) B,E,C,D,A 2) B,A,D,C,E 3) D,E,A,C,B




32. என்னிடம் உள்ள பணத்தின் மூன்று மடங்கு பணம் அண்ணாவிடம் உள்ளது. அண்ணாவிடம் உள்ள பணத்தொகை 84ரூபா எனின் என்னிடம் உள்ள பணத்தொகை யாது?

1) 28.00 2) 33.00 3) 21.00

33. ½ பங்கு நிழற்றப்பட்ட உருவை தெரிவு செய்க.

1) 
2) 
3) 

34. வேறுபடும் உருவின் கீழ் கோடிடுக.

1) 
2) 
3) 

35. பின்வரும் ஆங்கில எழுத்துக்களில் கண்ணாடி முன் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் எழுத்து எது?

1) S 2) V 3) P

❖ **நான்கு மாணவர்கள் விரும்புகின்ற பழங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.**

ரதன்
மாம்பழம்
பப்பாசிபழம்
அன்னாசி
பலாப்பழம்

டேவிட்
றம்புட்டான்
கொய்யா
அன்னாசி
மாம்பழம்

காமேஸ்
மாம்பழம்
தோடை
றம்புட்டான்
கொய்யா

அமீன்
வாழை
அப்பிள்
மாம்பழம்
பலாப்பழம்

36. நான்கு மாணவர்களும் விரும்புகின்ற பழம் எது?


1) அன்னாசி 2) மாம்பழம் 3) தோடை

37. டேவிட் விரும்புகின்ற காமேஸ் விரும்பாத பழம் எது?

1) தோடை 2) கொய்யா 3) அன்னாசி

38. தோட்டம் ஒன்றில் கத்தரி, தக்காளி, மிளகாய் செடிகள் மாறிமாறி நடப்பட்டன. முதலாவது கத்தரிச்செடி எனின் 25வது செடி எது?

1) தக்காளி 2) கத்தரி 3) மிளகாய்

39. 

உருவில் நிழற்றப்பட்ட பகுதி

1) $\frac{1}{2}$ இலும் கூடியது 2) $\frac{1}{2}$ இலும் குறைந்தது 3) $\frac{1}{2}$ க்கு சமன்

40. உரோமன் எண் 5ஐ எழுதுவதற்கு 2 தீக்குச்சிகளும், 6ஐ எழுதுவதற்கு 3 தீக்குச்சிகளும் பயன்படுத்தப்பட்டன. இலக்கம் 9ஐ எழுதுவதற்கு தேவையான தீக்குச்சிகள் எத்தனை?

1) 6 2) 3 3) 4

(2½x40=100புள்ளிகள்)

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

பெயர் : .....

மஞ்சரி - 02

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

(01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

நற்குணங்கள் உடைய ஒருவருக்குச் செய்த உதவியானது கல்லில் எழுதப்பட்ட எழுத்துப் போல் என்றும் அழியாமல் நிலைத்திருக்கும். அதாவது அவர்கள் எப்போதும் அதை ஞாபகத்தில் வைத்திருப்பர்.

01. நற்குணங்கள் என்ற சொல்லை பிரித்தெழுதுக? .....

02. மறதி என்ற சொல்லின் எதிர் சொல்லை எழுதுக? .....

03. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமானம் எது? .....

04. உதவி என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க்குறி எது? .....

05. உபகாரம் என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல் எது? .....

06. என்றும் அழியாமல் நிலைத்திருப்பது எது? .....

(06புள்ளிகள்)

(02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

01. ..... மூலம் உயிர்கள் சுவாசிக்கும். (வளி, வழி)

02. நுளம்பின் மூலம் மலேரியா ..... (காய்சல், காய்ச்சல்) ஏற்படும்.

03. (கைமாறு, கைம்மாறு) ..... கருதாமல் பிறருக்கு உதவுதல் சிறந்தது. (03புள்ளிகள்)

(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (□) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

01. வருகிறார்கள் என்ற சொல் முன்னிலை பன்மை வினைச்சொல் ஆகும். ( )

02. சென்றனர் என்பது நிகழ்கால பன்மை வினைமுற்றாகும். ( )

(02புள்ளிகள்)

(04) பின்வரும் பாடலில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

1) பருவம் பார்த்து நாங்கள்
.....
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்.

2) சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
.....
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது.

(04புள்ளிகள்)

(05) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

01. *please look at the picture* .....

02. *I am sorry* .....

(04புள்ளிகள்)

(06) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

01. தயவு செய்து வரவு இடாப்பினை எனக்கு கொண்டு வந்து தாருங்கள்

.....

(02புள்ளிகள்)

www.lkedu.lk

(07) பின்வரும் ஆங்கில சொற்கள் ஒவ்வொன்றிலும் ஒர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ் எழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.

01. airpo.....t *02. m.....ther* (02புள்ளிகள்)

(08) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

01. இன்று வேண்டாம் ..... (02புள்ளிகள்)

(09) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

01. වෙසිකිලිය කොහේ(dh) ද ? ..... (02புள்ளிகள்)

(10) வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

01. வாசிப்பதன் மூலமாக பல ..... (தகவலை, தகவல்களை) அறிந்துகொள்கின்றோம்.

02. ஒவ்வொரு ..... (பந்திகளிலும் , பந்தியிலும்) ஒவ்வொரு முக்கிய கருத்துச் சொல்லப்பட்டிருக்கும்.

03. அவனுடைய முகம் ..... (மலர்ந்தன , மலர்ந்தது) (03புள்ளிகள்)

(11) ஒரு மனிதன் பிறப்பது மண்ணில் இறப்பதும் மண்ணில். மண் வளம் பெறுமதியானது **"மண்ணைக் காக்கும் முறைகள்"** *பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத்தொடர்புகள் எழுத்துக்கூட்டல் ஆகியன சரியாக இருக்க வேண்டும்.*

01. .....

02. .....

03. ..... (06புள்ளிகள்)

13) கணித வினாக்களுக்கு விடை தருக.

01. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக? 60070

.....

02. எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை உரோமன் இலக்கங்களில் எழுதுக.

1) நான்கு - .....2) பதினைந்து - .....


03. அடுத்து வரும் எண்களை வெற்றிடங்களில் நிரப்புக.

4 , 7 , 8 , 14 , 12 , 21 , ..., ...

*04. பெருக்கல் * என்னும் குறியினாலும் பிரித்தல் # எனும் குறியினாலும் குறிக்கப்படும் எனின் பின்வருவதன் பெறுமானத்தை எழுதுக.*

*1) 56 # 7 * 8 = ...*

05. பின்வரும் பின்னங்களை கூட்டுக. $\frac{2}{6} + \frac{1}{2} =$ .....

06. 

1) உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னமாக எழுதுக. .....

2) நிழற்றாத பகுதியை தசம எண்ணில் தருக? .....

07.

32	27		28
	18	45	
41		40	35
	21	42	36

தரப்பட்ட எண்களை பயன்படுத்தி ,

1) 4ஆலும் , 5ஆலும் வகுக்கக்கூடிய எண் ஒன்றை எழுதுக? .....

2) நான்கின் மடங்குகளை ஒழுங்கு முறையில் எழுதுக?

....

08. புகையிரத நிலையத்திற்கு 15 :40 மணித்தியாலத்திற்கு வரவேண்டிய புகையிரதம் 40 நிமிடங்கள் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கேற்ப புகையிரதம் வரும் நேரம் யாது? .....

09. பின்வருவன சாந்தி வாங்கிய பொருள்களின் பட்டியல் ஆகும்.

அ) ஒரு kg ரூபா 80 வீதம் 4 கிலோகிராம் அரிசி

ஆ) ஒரு kg ரூபா 480 வீதம் 500கிராம் தேயிலை


இ) ஒன்று ரூபா 299 வீதம் 3 பால் மா பைக்கற்றுக்கள்.

ஈ) ஒரு லீற்றர் ரூபா 210வீதம் 2லீற்றர் 500மில்லிலீற்றர் மண்ணெண்ணெய்


01) மேற்குறித்த தகவல்களுக்கேற்ப பொருள்களுக்காகச் செலுத்திய பணத்தை வெற்றிடங்களில் எழுதுக.

பொருள்	செலுத்திய பணம்	
	ரூபா	சதம்
அரிசி	320	00
தேயிலை	1	.....
பால்மா பைக்கற்று	2	.....
மண்ணெண்ணெய்	525	00

02) எல்லா பொருள்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்தப்பணம் யாது? .....



10.B அறையின் நீளம் யாது? .....

11. 

பின்வரும் நெய்யரியில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்கு சமமானதாகும். .....

12. ஒரு பாத்திரத்தில் 3லீற்றர் 275 மில்லிலீற்றர் குளிர்பானம் உள்ளது. அக் குளிர்பானம் 5 சம போத்தல்களில் நிரப்பபட்டது. ஒரு போத்தலில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது? .....

(34புள்ளிகள்)

14) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. வித்துக்களின் மூலமும் கிளைகளின் மூலமும் முளைக்கச்செய்யப்படும் தாவரம்,

1) பாகல் 2) முருங்கை 3) அகத்தி 4) மரவள்ளி

02. காற்றின் மூலம் பரம்பலடையும் தாவரம்?

1) மரமுந்திரி 2) தேக்கு 3) மகோகனி 4) ஆமணக்கு

03. இலங்கைக்கே உரிய விலங்கு

1) கிளி 2) நாரை 3) கருங்குயில் 4) கானாங்கோழி

www.lkedu.lk

04. பின்வருவனவற்றுள் மாமிசத்தையும், பழங்களையும் உண்பது,

1) பருந்து 2) வௌவால் 3) சிங்கம் 4) கிளி

05. உருளைக்கிழங்கில் அதிகளவில் அடங்கும் போசணைப்பொருள்,

1) கனியுப்புக்கள் 2) புரதங்கள் 3) விற்றமின்கள் 4) காபோவைதரேற்றுக்கள்

06. இலங்கையில் உல்லாசப்பயணிகளை கவர்ந்த இடம்,

1) வவுனியா 2) புத்தளம் 3) மஹியங்கனை 4) ஹிக்கடுவை

07. இந்தியாவிற்கு அண்மையில் இருக்கும் நாடு

1) ஜப்பான் 2) கனடா 3) சவுதிஅரேபியா 4) இலங்கை

08.  பின்வரும் உருவில் உள்ள தாவரம்,

1) துளசி 2) ஆமணக்கு 3) வேம்பு 4) திராட்சை

09. இலங்கையில மத்தள விமான நிலையம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.

1) கொழும்பு 2) அம்பாந்தோட்டை 3) மாத்தறை 4) களுத்துறை

10. அம்பேவல பிரதேசம் பிரசித்திப்பெறுவது

1) அழகிய பூங்கா உள்ளமையினால் 2) பனிப்பிரதேசம் என்பதால்

3) விலங்கு பால் உற்பத்திச்செய்யப்படும் தொழிற்சாலை இருப்பதால்

4) கைத்தொழிலுக்கான கேந்திர நிலையம் என்பதால்.

11. பூமிக்கு அண்மையில் இருக்கும் கோள்

1) வெள்ளி 2) புதன் 3) வியாழன் 4) சனி

12. இலங்கை தேசப்படத்தில் உயர்ந்த குன்றுகளை அடையாளப்படுத்துவதற்கு பாவிக்கும் நிறம்,

1) கறுப்பு 2) பச்சை 3) நீலம் 4) கபிலம்

13. சூழலுக்கு நேயமான பூச்சி நாசினியைத் தயாரிப்பதற்கு உகந்தது.

1) புகையிலை நீர் 2) ஆமணக்கு எண்ணெய் 3) மண்ணெண்ணெய் 4) வெந்நீர்

14. யானைக்கால் நோயை உண்டாக்குவது,

1) இலையான் 2) சிலந்தி 3) நுளம்பு 4) வண்டு

15. யோத வாவியை கட்டுவித்த மன்னன்

1) தேவநம்பியதீசன் 2) தாதுசேனன் 3) முகலன் 4) காசியப்பன்

16. கற்றாளை பயன்படுவது,

1) நெஞ்சில் சலியைப்போக்க 2) மூக்கு அடைப்பை நீக்க

3) நோவுகளுக்கு ஒத்தடம் வழங்க 4) சுட்ட புண்களை ஆற்ற

17. கடதாசித்துண்டுகளை கிழித்து ஒட்டிச்செய்யப்படும் ஆக்கம்,

1) ஓரிகாமி 2) கொலாஜ் 3) பத்திக் 4) அச்சுப்பதித்தல்

18. கறுப்பு நிறத்தையும் , சிவப்பு நிறத்தையும் கலந்து உண்டாக்கப்படும் நிறம்

1) ஊதா 2) கபிலம் 3) சாம்பல் 4) இளம் சிவப்பு

19. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் செய்யக்கூடாதது

1) வானொலி கேட்டல் 2) கட்டிலின் மேல் உறங்குதல்

3) பலகையின் மேல் நடத்தல் 4) பேருந்து வண்டியில் பயணித்தல்

20. பறவைகள் சரணாலயங்களில் ஒன்று,

1) யால 2) வில்பத்து 3) பின்னவல 4) குமண

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1

பெயர் : .....



மஞ்சரி -03

நேரம்: 45 நிமிடம்


புள்ளிகள் :

பாடலை வாசித்து பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

01. சொன்னதை சொல்லும்
பறவை நான்
சொண்டால் பழத்தை கலைத்திடுவேன்

1) 
2) 
3) 

02. பூவின் மேலே பூவொன்று
பூத்திருக்கும் புதுமைபார்
நண்பனே அது பூவல்ல

1) 
2) 
3) 

03. சமதூர இடைவெளியில் நடப்பட்ட நான்கு கம்பங்களுக்கு இடையிலான தூரம் 36m எனின் ஐந்து கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?

1) 45m 2) 48m 3) 39m

04. ஏப்ரல் 2ஆம் திகதி ஆரம்பமாகும் பாடசாலை கண்காட்சி ஒன்று ஏப்ரல் 6ஆம் திகதி முடிவடைந்தது. கண்காட்சி நடைபெற்ற நாட்கள் எத்தனை?

1) 4 நாட்கள் 2) 5நாட்கள் 3) 3நாட்கள்


5ஆம், 6ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

05. CDE , EFG , GHI , ...

1) JKL 2) IJK 3) IKM

06. ○○○△ ○○△● ○△●● .....

1) △●●● 2) △○○● 3) ●△●○

07. 
தரப்பட்ட வெட்டுருவை மடித்து செய்யத்தக்க திண்ம வடிவம் எது?

1) கூம்பகம் 2) நான்முகி 3) அரியம்

08. வீதியொன்றை அலங்கரிக்கும் முகமாக 25 கம்பங்களில் கொடிகள் ஏற்றப்பட்டன. இரண்டு கம்பங்களுக்கிடையே இரண்டு பூச்சாடிகள் வீதம் வைக்கப்பட்டன. வீதியை அலங்கரிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் எத்தனை?

1) 50 2) 48 3) 52

09. 365, 653, 536, 563, 356 தரப்பட்ட எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் யாது?

1) 536 2) 563 3) 653

www.ikedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

10. நான்கு தீக்குச்சிகளை பயன்படுத்தி அமைக்கக்கூடிய இரு உரோமன் எண்களும் எவை?

1) 10 , 13 2) 12 , 20 3) 9 , 11

11. 2016ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை எனின் 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி என்ன கிழமை ?

1) சனிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை

12. CDDAACBA -34411321 ஆகும். இதற்கேற்ப 45236651 இற்கு சமனானவை,

1) DEBCFFEA 2) DFCBEEBA 3) CEBDFFAB

13. A என்ற இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்த குமார் வடக்கு நோக்கி 20m சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி 20m தூரம் சென்று B ஐ அடைந்தான். A இல் இருந்து B எத்திசையில் உள்ளது?

1) வடமேற்கு 2) வடகிழக்கு 3) தென்கிழக்கு

14. எனது வகுப்பில் உள்ள சகல மாணவர்களும் பாடசாலைக்கு நடந்து வருவார்கள். விதுஷா பாடசாலைக்கு நடந்து வருவாள். எனவே விதுஷா எனது வகுப்பு மாணவி என்பது

1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

15. புதுமை என்னும் சொல் ✙✢✣ எனவும் வசம் என்னும் சொல் ✯✲✪ எனவும் குறியீடுகளை பயன்படுத்தி எழுதப்பட்டது. எனின் தும்பு என்பது எவ்வாறு எழுதப்பட வேண்டும்.


1) ✢✪✙ 2) ✙✢✪ 3) ✪✢✙

16. ஊவா மாகாணத்திற்கான தேர்தல் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்ட இரு மாவட்டங்களும் முறையே,

1) பதுளை , இரத்தினபுரி 2) கேகாலை , குருநாகல் 3) பதுளை, மொனராகல

17. இரு நிரைகளும் சமனாக இருக்கும் உரு நிரையை தெரிவு செய்க.

1) ✳●✣✠✦ = ✳●✣✠✦ 2) ✱☆✲♥ = ✱☆✲♠✡ 3) ✣✠✤★✯ = ✣✠✢☆✯


18. 

இங்கு அதிகளவில் காணப்படுவது

1) ஒற்றை எண்கள் 2) இரட்டை எண்கள் 3) எண்கள்

19.  = 60 எனின்  இவ் உருவின் பெறுமானம் யாது?

1) 15 2) 20 3) 24

20. 

தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் பெறப்படும் திண்ம வடிவம் எது?

1) சதுரமுகி 2) கனவுரு 3) நான்முகி

www.1kedu.lk

21. "நான் பெப்ரவரி மாதம் ஐந்தாவது புதன் கிழமை பிறந்தேன்." என கண்ணன் கூறினான். கண்ணன் பிறந்த ஆண்டு யாதாக இருக்கலாம்?

1) 2001 2) 2004 3) 2006

22. cow - bat - top = cap என அமையுமாயின் tap - hen - sea = ... எவ்வாறு அமையும்

1) ten 2) tea 3) Two

23. பிரதிவாதி எனப்படுபவன்

1) வழக்கில் குற்றம் சாட்டப்படுபவர்
2) வழக்கை தாக்கல் செய்பவன்
3) சிறைத்தண்டனை பெற்றவன்.

❖ **கமல் ஐந்து நாட்கள் உண்டியலில் இட்ட பணம் கீழே தரப்பட்டுள்ளது.**

திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
ரூபா8	ரூபா11	ரூபா16	ரூபா23	ரூபா32

24. கமல் சனிக்கிழமை உண்டியலில் இட்ட பணத்தொகை யாது?

1) ரூபா41 2) ரூபா43 3) ரூபா40

25. திங்கள் முதல் வெள்ளிவரை பிள்ளை சேகரித்த மொத்தப் பணத்தொகை யாது?

1) ரூபா89 2) ரூபா87 3) ரூபா90

❖ **15 ஆம் 16ஆம் வினாக்களுக்கு பின்வரும் உருக்களையும் அவைகுறிக்கும் விடயங்களையும் பயன்படுத்தி பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

✡ - மேற்கு	☼ - சூரியன்	⇨ - சென்றான்	- கபிலன்
↺ - நேற்று	# - மறைந்தது	- நூலகம்	- வானில்

26. பின்வரும் உருநிரை எதனைக் குறிக்கிறது?

☼ ✡ #

1) மேற்கு வானில் சூரியன் மறைந்தது
2) சூரியன் மறைந்தது மேற்கு வானில்
3) சூரியன் மேற்கு வானில் மறைந்தது.

27. பின்வரும் உருநிரை எதனைக் குறிக்கிறது?

↺ ⇨

1) கபிலன் நேற்று நூலகம் சென்றான்.
2) நேற்று நூலகம் கபிலன் சென்றான்.
3) நூலகம் நேற்று கபிலன் சென்றான்.

கீழே தரப்பட்ட பந்தியில் இடைவெளிக்கு வரவேண்டிய சொற்களை தெரிந்து கோடிடுக.

நாம் அடர்ந்த காட்டினுள் நுழைந்த போது நீர் ஓடையில் கலைமானும் (A) ..... மானும் நீர் அருந்துவதைக்கண்டோம். தொலைவில் யானைகள் (B) ..... சத்தம் கேட்டது. மரங்களில் நிறைந்திருந்த பூக்களில் இருந்து வாசனை (C) ..... என வீசியது.

28. A இடைவெளிக்கு வரவேண்டிய சொல் எது?

1) பிடி 2) கடுவன் 3) பிணை


29. B இடைவெளிக்குரிய சொல்லை தெரிக?

1) உறுமும் 2) பிளிறும் 3) கத்தும்

30. C இடைவெளிக்கு வரவேண்டிய சொல் எது?

1) கமகம 2) சலசல 3) பளபள


www.lkedu.lk

31. 


A வட்டம் மூன்றால் வகுபடக்கூடிய எண்களையும் B வட்டம் ஐந்தால் வகுபடக்கூடிய எண்களையும் குறிக்கின்றது எனின் C வட்டத்தில் வரவேண்டிய எண் யாது?

1) 12 2) 20 3) 15


32. வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக?

1) 

1) 12

2) 

2) 13

3) 

3) 11

ஓவியாவை விட வேதிகா கூடிய புள்ளிகளை பெற்றாலும் ரமணியை விட குறைந்த புள்ளிகளையே பெற்றாள்.


33. இவர்களில் கூடிய புள்ளிகளை பெற்றவர் யார்?

1) வேதிகா 2) ஓவியா 3) ரமணி

34. குறைந்த புள்ளிகளை பெற்றவர் யார்?

1) ஓவியா 2) வேதிகா 3) ரமணி

35. உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புடைய செயல்கள் முறையே இடம்பெறும் விடையை தெரிவுசெய்க.





1) எழுதுதல் , அணிதல்

2) சீவுதல் , தைத்தல்


3) வரைதல் , வெட்டுதல்

36. 60தொடக்கம் 67 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 6 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1) 7 2) 8 3) 9

37தொடக்கம் 40வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

37. இந்தியாவில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்த இவர் சிறந்த புலவர். சுவை நிறைந்த பல பாடல்களை பாடினார். இவர் யார்? .....

38. 

கட்டத்தில் உள்ள சொற்களை கொண்டு மாவட்டம் ஒன்றின் பெயரை எழுதுக.

.....

39. 

இங்கு அதிக தடவை வரையப்பட்ட உருவை வரைக?

.....

40. நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கை காட்சிகளை கொண்டது. பச்சைக்கம்பளம் விரித்தது போல மலைத்தொடர்கள் இன்னிசை கீதம் இசைத்தபாடி பாய்ந்து வரும் அருவிகள் என்பன காணப்படுகின்றன.

பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை குறிப்பிடுக.? .....

(2½x40=100புள்ளிகள்)

www.ikeau.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

மஞ்சரி - 03

பகுதி - 11

நேரம்: 1மணி 15 நிமிடம்

பெயர் : .....

புள்ளிகள் :

(01) பின்வரும் பாடலை தெளிவாக வாசிக்க.

அன்பு மிக்க சோமுவுக்கு — "வணக்கம்" என்றே அடுத்த வரியில்
என்று தொடங்குவேன் — தனியாய் எழுதுவேன்
அச்சடித்த எழுத்தைப்போல — வரிசையாகத் தகவல் யாவும்
அழகாய் எழுதுவேன் — புரியக் கூறுவேன்

கேட்கப்படும் வினாக்களுக்கு பாடலில் இருந்து விடையை இனங்கண்டு எழுதுக.

01. பாசம் என்ற சொல்லின் கருத்தைத் தரும் ஒரு சொல் ? .....
02. அச்சடித்த என்ற சொல்லை பிரித்தெழுதுக. ? .....
03. கூட்டமாய்என்ற சொல்லின் எதிர்சொல்லைத் தருக? .....
04. தனியாய் எழுதப்படும் சொல் எது? .....
05. பாடலில் இடம் பெற்ற உவமானம் எது? .....
06. கடிதம் யாருக்கு எழுதப்படுகின்றது? .....

06புள்ளிகள்)

(02) தரப்பட்ட தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

01. அருமை பெருமை என்பது .....(பெரும்புகழ், மிகச்சிறப்பு)
02. படர்க்கைப் பன்மை பெயர்ச்சொல் ..... (பறவைகள், கடல்)
03. சிறுவர் அம்புலி கண்டு மிகிழ்ந்தனர். அம்புலி என்பது .....(வானவில், நிலா)
04. நகையும், பரிகாசமும் பொருந்த கவி படைப்போன் ..... (புலவன், விகடகவி)
05. பனை மரத்தின் காய் எது? ..... (வடலி, நுங்கு)

(05புள்ளிகள்)

(03) பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

01. கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
..... அம்மா !
சுந்தரமேனியுண்டாகும், அம்மா - இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

02. பச்சைக்கிளியே வா, வா, வா
.....
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா

03. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

இக் குறள் மூலம் எதனை மறக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்? .....

(06புள்ளிகள்)

(04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

01. ஓர் ஆச்சிரமம் ..... (தெரிகிறது , தெரிகின்றன)
02. பிரதம நடுவரால் போட்டி முடிவுகள் ..... (அறிவிக்கப்பட்டன , அறிவிக்கப்பட்டது)
03. மற்றைய குழு பந்தைக் காப்பதற்காக மைதானத்திற்குச் ..... (சென்றது , சென்றன)
04. செய்திகளை வெளியிடுவதில் ..... (பத்திரிகை , பத்திரிகைகள்) பிரதான இடம் வகிக்கிறது.

(04புள்ளிகள்)

www.ilkedu.lk

(05) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக

01. *Please Excuse me* .....

(06) வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லை தெரிந்து அதன்கீழ் கோடிடுக. (01புள்ளிகள்)

01. *I ..... pluck flowers. (want / wants)*

02. *I am ..... a book (reading / read)* (02புள்ளிகள்)

(07) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.

01. நாம் ஆயத்தமாகுவோமா? .....

02. தயவு செய்து அவசரப்படுத்தவும். .....

(04புள்ளிகள்)

(08) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

01. நான் தண்ணீர் பருகுகின்றேன் .....

(02புள்ளிகள்)

(09) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

01. ඔව් මම එන්නම්. .....

(02புள்ளிகள்)

(10) சகல பிள்ளைகளும் விளையாடுவதற்கு விருப்பமுடையவர்கள். விளையாட்டின் மூலம் பல தரப்பட்ட நன்மைகளையும் அடைந்து கொள்ள முடியும் அதன் அடிப்படையில் **விளையாட்டின் மூலம் கிடைக்கும் பயன்கள்** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத்தொடர்புகள் எழுத்துக்கூட்டல் ஆகியன சரியாக இருக்க வேண்டும்.

01. .....


02. .....

03. .....

(06புள்ளிகள்)

(11) கணித வினாக்களுக்கு விடை தருக.

01. எழுத்தில் எழுதுக. 60017 .....

02. 

வட்டத்தில் உள்ள இலக்கங்களை பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச்சிறிய எண்ணை எழுதுக? .....

03. தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்து வரும் உரோமன் எண்ணை எழுதுக. ix .....


04. தரப்பட்டுள்ள எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக?

1) 5 , 7, 10 , 14 , 19 ..... 2) 27 , 23 , 19 , 15 , ...

05. இவ் உருவில் உள்ள

1) செங்கோணங்கள் எத்தனை? .....

2) சமச்சீர் அச்சுக்கள் எத்தனை? .....



www.lkedu.lk


06. ஒரு பிள்ளை A என்னும் இடத்திலிருந்து 20m வடக்கே செல்கின்றது. பின்னர் அது அவ்விடத்தில் இருந்து 20 m கிழக்கே சென்று C எனும் இடத்தில் நிற்கின்றது எனின் Cக்கு எத்திசையில் A அமைந்துள்ளது? .....

07. ஒரு பாத்திரத்தில் உள்ள மண்ணெண்ணெய்யில் இருந்து 5லீற்றர் 400மில்லிலீற்றர் அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 13 லீற்றர் 600 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த மண்ணெண்ணெய்யின் கனவளவு யாது? .....

08. 10 பென்சில்களிலிருந்து $\frac{3}{5}$ ஐ விற்றபின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது? .....

09. ஒரு பாடசாலையில் கலைவிழா முற்பகல் ஒன்பது நாற்பத்தைந்து மணிக்கு ஆரம்பித்தது. அது 4மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின்னர் முடிவடைந்தது எனின் கலைவிழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியால கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக? .....

10. உருவைக் கொண்டு கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



1) நிழற்றாத பகுதியை ஒரு தசம எண்ணாகத் தருக? .....


2) நிழற்றிய பகுதியை ஒரு பின்னமாகத் தருக? .....

11. பின்வரும் எண்களுள் நான்கின் மடங்கல்லாத, எண்ணை தெரிவு செய்து எழுதுக?

24 , 32 , 40 , 34 , 44 .....


12. 500 மில்லிலீற்றர் கொண்ட பழப்பானப்போத்தல் 3 பேரை உபசரிக்க போதுமானது எனின் 20 பேரை உபசரிப்பதற்கு எத்தனை பழப்பான போத்தல்கள் தேவையாகும்.? .....

13. சிறிய சதுரங்கள் 5ஐ பயன்படுத்தி இவ் உரு தயாரிக்கப்பட்டுள்ளது,



சிறிய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் ஒரு சென்ரிமீற்றர் ஆகும்.

எனின் உருவின் சுற்றளவை சென்ரிமீற்றரில் தருக? .....

14. 

இவ் உருவில் உள்ள செவ்வகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(36புள்ளிகள்)

(11) மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. இலங்கையின் தேசிய மரத்தின் மலர் எது?

1) நாகமலர் 2) நீலஅல்லி 3) வெண்தாமரை 4) செந்தாமரை

02. நிலத்தில் மாத்திரம் வாழும் விலங்கு?

1) கடலாமை 2) இறால் 3) தவளை 4) மண்புழு

03. வருடம் முழுவதும் பூப்பது,

1) மரமுந்திரி 2) செவ்வரத்தை 3) கார்த்திகை 4) முள்முருக்கை

04. பின்வரும் எவ்விலங்கு பொருளாதார ரீதியில் பயன் தரும் ஒரு பொருளை தருகின்றது?

1) வண்ணத்துப்பூச்சி 2) மழைக்குருவி 3) பசு 4) ஆமடிலா

05. உடல் வளர்ச்சிக்குரிய உணவு,

1) முட்டை 2) கரட் 3) சோறு 4) கிழங்கு

06. தேசிய கீதத்தைத் பாடும் போது நாம் நிற்கவேண்டிய முறை,

1) இலகுவாக நிற்றல் 2) நிமிர்ந்து நிற்றல்

3) பொறுமையாக நிற்றல் 4) தலையைத் தாழ்த்தி நிற்றல்.

07. இலங்கை அரச இலச்சினையில் வாளேந்திய சிங்கம் அடையாளப்படுத்துவது,

1) சௌபாக்கியத்தையாகும். 2) தன்னிறைவையாகும்.

3) நிலைத்திருத்தலையாகும். 4) கட்டுப்பாடான நாட்டு மக்களையாகும்.

08. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் நான்காவது படிமுறை யாது?

1) உடலை தளர்த்துதல் 2) மன உறுதி 3) பிரார்த்தனை 4) உதிப்பு

09. அசுத்த நீரை பருகுவதனால் ஏற்படும் நோய்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1) மலேரியா , டெங்கு, யானைக்கால் 2) வாந்திபேதி, கொலரா, செங்கண்மாரி

3) கழிச்சல் , கொள்ளை , விசர் நாய்க்கடி 4) டெங்கு , மலேரியா , நெருப்புக்காய்ச்சல்

10. கண்களினூடாக தகவல்களைப் பெறுவதற்காக பயன்படுத்த முடிவது,


1) வானொலி 2) ஒலிபெருக்கி 3) தொலைக்காட்சி 4) சுவரொட்டி

11. வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடை,

1) பாக்குவெட்டி - தள்ளுதல் 2) வில்பரோ - இழுத்தல்

3) கப்பி - இழுத்தல் 4) குறடு - அறைதல்

12. மின் விநியோகிக்கும் இடம் என்பதைக்காட்டும் உரு

1)  2)  3)  4) 

13. டிசு தாள் பயன்படுவது,

1) திசைக்காட்டியில் 2) காற்றாடியில் 3) துளைக்கெமராவில் 4) நீராவி படகில்.

14. ஒலிம்பிக் கொடியில் உள்ள சிவப்பு நிற வட்டம் குறிக்கும் கண்டம்

1) அவுஸ்திரேலியா 2) ஆசியா 3) ஐரோப்பா 4) அமெரிக்கா

15. பசவக்குளத்தை கட்டுவித்தவன்.

1) பண்டுகாபயன் 2) தாதுசேனன் 3) துட்டகைமுனு 4) மகாசேனன்

16. இலங்கையில் புலமைப்பரிசில் பரீட்சையை அறிமுகம் செய்தவர்,

1) சேர். டி.பி . ஜயதிலக்க 2) கலாநிதி. ஆனந்தகுமாரசுவாமி

3) கலாநிதி. டி.பி . ஜயா 4) கலாநிதி . C.W.W கன்னங்கரா

17. நாம்புவ பயன்படுவது,

1) வனைதல் தொழிலில் 2) வயல் வேலைகளில் 3) சுரங்கத்தொழிலில் 4) இரத்தினக்கல் தொழிலில்

18. வீட்டு முற்றத்தில் சதுரக்கோடுகள் வரைந்து விளையாடப்படுவது,

1) ஹொக்கி 2) சில்லுக்கோடு 3) கபடி 4) பல்லாங்குழி

19. சீகிரியாக்குன்று அமைப்பெற்றுள்ள மாகாணம் எது

1) சப்ரகமுவ மாகாணம் 2) மத்திய மாகாணம்

3) வடமத்திய மாகாணம் 4) ஊவாமாகாணம்.

(30புள்ளிகள்)

20. இலங்கையில் மிக உயரமான மலை

1) சிவனொளிபாதமலை 2) மிகிந்தலை 3) பேதுருதாலகால 4) பம்பரகந்த

www.lkedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1

பெயர் : .....

மஞ்சரி -04

நேரம்: 45 நிமிடம்

புள்ளிகள் :

◆.1தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

◆. 1ஆம், 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

01. 

1) 

2) 

3) 


02. 


1) 


2) 


3) 


❖. 3ஆம், 4ஆம் வினாக்களில் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்கு வரவேண்டிய உருவை தெரிவு செய்க.


03. 





1) 

2) 

3) 

04. 

1) 


2) 

3) 

05. ஒரு குறித்த ஆண்டில் மேமாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை எனின் ஜூன் மாதம் 12ஆம் திகதி என்ன கிழமை?

1) வியாழக்கிழமை 2) செவ்வாய்க்கிழமை 3) புதன்கிழமை

06. கட்டத்தில் உள்ள உருக்களுக்கு பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றின் கூட்டுத்தொகை நிரலாகவும், நிரையாகவும் தரப்பட்டுள்ளது. இதன்படி -?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடை யாது?



1) 20 2) 22 3) 19

07. சரியான கருத்து இடம்பெறும் வாக்கியத்தை தெரிவு செய்க.

1) பரதன் எல்லலவும் தருமம் தவராதவன். 2) பரதன் எல்லளவும் தருமம் தவறாதவன்.

3) பரதன் எள்ளளவும் தருமம் தவறாதவன்


08. 

முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் வடிவம் எது?

1) 

2) 

3) 

09. 

அடைப்பில் உள்ள மிகச்சிறிய ஒற்றை எண்ணுக்கும் மிகப்பெரிய இரட்டை எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

1) 15 2) 16 3) 13

www.ikeda.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

10. தரப்பட்ட உருக்களின் பெறுமதிகளை இனங்கண்டு சரியான விடையை தெரிவு செய்க.

✠ x ✠ = 25	✷ - ✠ = 4	✪ x ✷ = 27



✪ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1) 4 2) 2 3) 3

11. 4567 567 ..... 7 கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?

1) 76 2) 67 3) 54

12. நான்கு சமச்சீர் அச்சுக்களை கொண்ட உரு எது?

1)  2)  3) 

13. 2016ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் மேமாதம் 10 திகதி வரையான நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 130நாட்கள் 2) 131நாட்கள் 3) 127நாட்கள்

14. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

சுமித்திரை : இலக்குமணன் எனின் கையேகி : .....

1) இராமன் 2) சத்துருக்கன் 3) பரதன்

15. புதுமை என்னும் சொல் ✙✛✣ எனவும் வசம் என்னும் சொல் ✯✲✪ எனவும் குறியீடுகளை பயன்படுத்தி எழுதப்பட்டது. எனின் தும்பு என்பது எவ்வாறு எழுதப்பட வேண்டும்.

1) ✛✪✙ *2)* ✙✛✪ *3)* ✪✛✙

16. தரப்பட்டுள்ள கடிகார முகத்தை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் நேரம் எது



1) 7மணி 25 நிமிடம் 2) 8மணி 25நிமிடம் 3) 4மணி 35நிமிடம்


17. ஒரு பேருந்து நிலையத்தில் இருந்து 2 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை அனுராதபுர பேருந்து புறப்படும். முதலாவது பேருந்து மு.ப 5.30மணிக்கு புறப்பட்டது. எனின் அடுத்த இரண்டு பேருந்துகளும் புறப்படும் நேரங்கள் முறையே,

1) மு.ப.6.30, மு.ப.8.30 2) மு.ப.7.30 , மு.ப.10 .30 3) மு.ப.7.30 , மு.ப.9.30

18. வீடு ஒன்றை கட்டுவதற்கு 7800 செங்கற்கள் தேவைப்பட்டன. எங்களிடம் 3600 செங்கற்களே இருந்தன. மிகுதியை இரு தொழிற்சாலைகளில் இருந்து பெற்றுக்கொண்டோம். தொழிற்சாலையில் இருந்து பெற்ற செங்கற்கள்,

1) 2300 உம், 1900உம் 2) 2100உம், 2200உம் 3) 1800உம், 2300உம்

19. உருவில் நிழற்றப்பட்ட கட்டங்களின் எண்ணிக்கை யாது?



1) 10 2) 12 3) 14

20. உவமானத்திற்கு பொருத்தமான சந்தர்ப்பதை காட்டும் விடையை தெரிவு செய்க.

'எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல'

1) மேலும் கோபமூட்டச் செய்தல்

2) இல்லாத பொருளை தேடி அலைதல்.

3) வெளியுலகம் தெரியாமல் இருத்தல்.

www.lkedu.lk

21. சேரனின் மனைவி வேதிகா. சேரனின் சகோதரி யமுனா,யமுனாவின் மகன் அபிராமி. அபிராமிக்கு வேதிகா என்ன உறவு முறை?

1) சிறியதாய் 2) மாமி 3) மைத்துனி

வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.

22. அண்ணா பத்திரிகை படிக்க நூலகம் சென்றான். அப்பா மீன் பிடிக்க கடலுக்கு சென்றார்

அண்ணா : அப்பா எனின் நூலகம் : .....

1) மீன் 2) கடல் 3) பிடிக்க

23. ரவி குறித்த இடத்தில் இருந்து கிழக்கு திசையாக 30*m* தூரம் சென்று அங்கிருந்து தெற்காக திரும்பி 40*m* தூரம் சென்று அங்கிருந்து மேற்கு திசையாக திரும்பி 30*m* தூரம் சென்று நின்றான். ரவி பயணத்தை ஆரம்பித்த இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான்?

1) 30*m* 2) 40*m* 3) 70*m*

24. வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிவு செய்க.

3	6	9	12
4			16
5			20
6	12	18	24

1)

8	12
10	15

2)


7	10
8	16

3)

8	11
10	16

25. ஆதி பாடசாலைக்கு வருவதற்கு முன்னரே இமான் வந்து விட்டான். ஆதி வந்த பின்னரே பீற்றர் வருகை தந்தான். சரண் வந்த பின்னரே இமான் வந்தான் இவர்களில் முதலிலும், இறுதியிலும் வந்தவர்கள் முறையே,


1) ஆதி, பீற்றர் 2) சரண், பீற்றர் 3) இமான், பீற்றர்

26. 

இந்த முக்கோண வடிவ காணியை அம்புக்குறி காட்டும் எந்தவொரு திசையில் இருந்தும் பார்க்கின்ற போது 12 கம்பிக்கட்டைகள் தெரிந்தன. எனின் நடப்பட்ட மொத்த கம்பி கட்டைகளின் எண்ணிக்கை யாது?

1) 36 2) 32 3) 33


வகுப்பொன்றில் உள்ள மாணவர்கள் விரும்புகின்ற பாடங்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளது.



27. ஒரு பாடத்தை மட்டும் விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?


1) 4பேர் 2) 16பேர் 3) 12பேர்

28. வெற்றிடத்திற்கு வரவேண்டிய பகுதியை தெரிவு செய்க.



1) 

2) 

3) 

29. கரப்பந்தாட்ட அணி ஒன்றில் உள்ள ஆறு வீரர்கள் தமக்கிடையே மாறிமாறி கைகுலுக்கிக் கொண்டார்கள். எனின் அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

1) 15 2) 30 3) 24


30. A,B,C,D,E,F ஆகிய எழுத்துக்கள் முறையே 3,6,5,4,2,1 ஆகிய இலக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப கழித்தல் செய்கைக்குரிய விடையை தெரிவு செய்க.

B C A
− C E F

1) ABF 2) FAE 3) FFE

www.lkedu.lk

தாயக்கட்டை ஒன்றின் மூன்று நிலைகள் கீழே தரப்பட்டுள்ளன.



31. இலக்கம்5 இலக்கம்4 ஆகியவற்றுக்கு எதிரே உள்ள இலக்கங்கள் முறையே,

1) 2உம், 3உம் 2) 6உம் , 1உம் 3) 3உம், 6உம்

32. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்குமுறை யாது?

A - காத்து உயிர்கள் காப்பவர்
B - உடல் வருந்தல் நீதியோ!
C - கண்ணைப் போல பயிர்களை
D - உண்ண உணவு இன்றியே

1) DBAC 2) CADB 3) ACBD

33. 3,6,8 ஆகிய மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமான எத்தனை எண்களை உருவாக்க முடியும்?

1) 6 2) 4 3) 8

தயாபரன் தனதுவீட்டில் இருந்து மு.ப 8மணிக்கு நகரத்தில் உள்ள வைத்தியசாலையை நோக்கிப்புறப்பட்டார். அவர் முதலில் வீட்டிலிருந்து 5km தூரத்தை மணிக்கு 10km வேகத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்றார். பின் அங்கிருந்து 20km தூரத்தை மணிக்கு 60km வேகத்தில் செல்லும் பேருந்தில் சென்று நகரத்தை அடைந்தார். அங்கிருந்து 2km தூரத்தை மணிக்கு 4km வேகத்தில் நடந்து சென்று வைத்தியசாலையை அடைந்தார்.


34. தயாபரன் சென்ற மொத்த தூரம் யாது?

1) 30km 2) 24km 3) 27km

35. தயாபரன் வைத்தியசாலையை அடைந்த நேரம் யாது?

1) 9மணி 40நிமிடம் 2) 9மணி 30நிமிடம் 3) 9மணி 20நிமிடம்

கீழே சில உருக்களின் கூட்டுத்தொகை தரப்பட்டுள்ளது.



36. ☯ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1) 18 2) 28 3) 20

37. ☆ இவ்வுருவின் பெறுமானம் யாது?

1) 28 2) 18 3) 20

P 2 T 3	B 2 T 3
+2 S 5 B	+2 P 8 S
9 6 6 9	.....

38. வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடை யாது?


1) 8997 2) 7975 3) 6984

39. எனது பெயர் நர்மதா நான் பாடசாலைவிட்டு வரும்வழியில் எனது மாமாவை சந்தித்தேன். அவர் தனது மகள் அபிநயாவை அழைத்து வருவதற்காக பாடசாலை நோக்கிச் செல்வதாக கூறினார்.

இத்தகவலுக்கு அமைய

1) நர்மதாவின் தந்தை அபிநயாவின் தந்தையின் சகோதரன் ஆவார்.
2) அபிநயாவின் தந்தை நர்மதாவின் தாயின் சகோதரர் ஆவார்.
3) நர்மதாவின் தாய் அபிநயாவின் தாயின் சகோதரி ஆவார்.

40.



இவ்வியந்திரத்தினுள் எண் ஒன்று இடப்பட்டு அவ்வெண் மூன்றால் பெருக்கப்பட்டு ஐந்துடன் கூட்டப்பட்டு வரும்விடையை இரண்டால் வகுத்ததும் விடையாக 13 வந்தது. எனின் இயந்திரத்தினுள் இடப்பட்ட எண் யாது?

1) 7 2) 9 3) 6

(2½x40-=100புள்ளிகள்)

www.1kedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

மஞ்சரி - 04

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

பெயர் : .....

10. ஒரு வாழைப்பழச்சீப்பில் 12 பழங்கள் உள்ளன. அவற்றின் விலை ரூபா 72.00 ஆகும் எனின் அவ்வாறான 18 வாழைப்பழங்களை உடைய வாழைப்பழச்சீப்பின் விலை யாது? .....

11. கழிக்குக. 14 444 - 5888 = ...

12. 1990 இல் 50வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய பாரதி தமிழ் வித்தியாலம் அதன் நூற்றாண்டு விழாவை எப்போது கொண்டாடும்.? .....

13. மு.ப. 10.30இற்கு ஒளிபரப்பான காட்டுன் நிகழ்ச்சியானது பி.ப. 3.25இற்கு முடிவுற்றது எனின், காட்டுன் நிகழ்ச்சியானது எவ்வளவு நேரம் ஒளிபரப்பப்பட்டது? .....

14. சதுரமுகி குற்றியொன்றின் வடிவத்தை ஒத்த பொருள் ஒன்றை எழுதுக? .....

15. இத்திண்மத்தில் உள்ள வளைந்த மேற்பரப்பின் வடிவம் யாது?.....



(34புள்ளிகள்)

(14) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. நோயிலிருந்து பாதுகாப்பு தரும் உணவு?

1) காய்கறிகள் 2) தானியங்கள் 3) விலங்குணவுகள் 4) கிழங்கு வகைகள்

02. இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடு

1) பூட்டான் 2) யப்பான் 3) சீனா 4) இந்தியா

03. பின்வரும் பூக்களிடையே ஐந்திதழ்களைக் கொண்ட பூ

1) அலரி 2) நாகமலர் 3) போகன்விலா 4) மல்லிகை

04. தேசப்படங்களில் மேட்டுநிலங்களைக் காட்ட பயன்படும் நிறம்?

1) கறுப்பு 2) மஞ்சள் 3) கபிலம் 4) சிவப்பு

05. ஓர் அணியில் ஏழு பேர் விளையாடுவது?

1) கரப்பந்து 2) கிரிக்கெட் 3) காற்பந்து 4) வலைப்பந்து

06. யால யானைகள் சரணாலயம் அமைந்திருப்பது?

1) கிழக்கு மாகாணம் 2) சப்ரகமுவ மாகாணம் 3) ஊவா மாகாணம் 4) மேல் மாகாணம்

07. சூழலில் ஆங்காங்கே நீர் தேங்கிக் கிடப்பதால் ஏற்படுவது?

1) கழிச்சல் 2) கொலரா 3) டெங்கு 4) கொள்ளை

www.lkedu.lk


08. 

இத்தையல் வகை,

1) நரம்பு
2) கம்பளி
3) சோம்
4) சங்கிலி

09. நீர் உள்ள பாத்திரம் ஒன்றில் மண்ணெண்ணெய் இட்டால் அவதானிக்க முடிவது

1) மண்ணெண்ணெய் நீரின் மேல் மிதக்கும்.
2) மண்ணெண்ணெய் நீரில் அமிழும்.
3) மண்ணெண்ணெய் நீருடன் கலந்திடும்.
4) நீரின் நிறம் சிவப்பு நிறமாக மாறும்.

10. 

A யினால் காட்டப்படும் நாடு

1) இந்தியா
2) இந்தோனேசியா
3) மலேசியா
4) இலங்கை

11. தேசியக் கொடியில் தேசிய ஒற்றுமையை குறித்துக் காட்டும் நிறம்,

1) பச்சை
2) மஞ்சள்
3) செம்மஞ்சள்
4) சிவப்பு

12. உடல் வளர்ச்சி பாதிப்படைவது

1) விற்றமின் குறைவதால்
2) கனியுப்புகள் குறைவதால்
3) மாச்சத்துக் குறைவதால்
4) புரதம் குறைவதால்

13. இயற்கைக் துறைமுகம் அமைந்துள்ள மாகாணம்,

1) கிழக்கு மாகாணம்
2) சப்ரகமுவ மாகாணம்
3) வடமாகாணம்
4) தென்மாகாணம்

14. ஏப்ரன் ஒன்றைத் தைப்பதற்கு உதவும் தையல் வகை,

1) நூலோடித்தையல்
2) சங்கிலித்தையல்
3) மீன்முள்ளுத்தையல்
4) புள்ளடித்தையல்

15. பொருளாதார ரீதியில் பயனுடைய விலங்கு

1) எறும்பு
2) எருது
3) நுளம்பு
4) நாய்

16. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில், கடமைகளை நிறைவு செய்கின்றோரை, பொறுப்புடன் வேலை செய்கின்றோரை., எனது வீட்டிலும் பாடசாலையிலும் சந்திக்க கிடைக்கட்டும் இவ்வெண்ணம் தோன்றுவது,

1) படி - 1
2) படி - 3
3) படி - 2
4) படி - 4

17. மண்ணினுள் மட்டுமே வாழக்கூடியது?

1) தவளை
2) கறையான்
3) முதலை
4) தேரை

18. முட்டையிட்டு தமது இனத்தைப் பெருக்குவது?

1) தேனீ
2) வெளவால்
3) அணில்
4) எலி

19. வீட்டுத் தோட்டத்திற்கு தீங்கு செய்வது?

1) தும்பி
2) வண்டு
3) தேனீ
4) குளவி

20. வித்துக்களைக் கொண்டு கன்றுகளை பெறமுடிவது,

1) சோளம்
2) குரோட்டன்
3) கோலியாஸ்
4) போகன்விலா

(30 புள்ளிகள்)

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1

பெயர் : .....



மஞ்சரி -08

நேரம்: 45 நிமிடம்

புள்ளிகள் :


(01) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

மிகவும் நெருங்கிய தொடர்புடைய உருசோடி இருக்கும் அடைப்பை தெரிவு செய்க.

01. 1)  2)  3) 

02. 1)  2)  3) 

தரப்பட்ட உருக்களை கவனத்தில் கொண்டு விடை தருக.



A B C D E F



03. குட்டியீனும் பிராணிகள் அடங்கிய விடை எது?

1) B,A,F 2) A,D,E 3) C,A,F


04. இலங்கைகுரித்தான பிராணிகளை குறிக்கும் விடை எது?

1) B,D,E 2) A,D,F 3) B,C,F

05. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஒன்று வேறுப்பட்டது வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக.

1)  2)  3) 

06. நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு 2சதுர cm எனின் முழு உருவின் பரப்பளவு யாது?



1) 16 சதுர cm 2) 24 சதுர cm 3) 18 சதுர cm

07. எண்ணூற்று அறுபத்தைந்தை குறிக்கும் விடை எது

1) 325 + 265 + 150 2) 475 + 280 + 130 3) 380 + 365 + 120

08. நேற்று இரவு வானில் சந்திரன் தென்பட்டது. ஆகவே நேற்று பௌர்ணமி தினமாகும் என்பது?

1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

09. வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிவு செய்க.

கை : வளையல் எனின் காது : .....

1) பூ 2) தோடு 3) பதக்கம்

10. தாரணி ஒன்பது சிறிய சதுரங்களை பயன்படுத்தி பெரிய சதுரம் ஒன்றை அமைத்தாள். பெரிய சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் 9cm எனின் சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு யாது?

1) 1சதுரcm 2) 9சதுரcm 3) 4சதுரcm

www.kedl.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...


11. ☼+ 3 -5x6=36 எனின் ☼இவ்வுருவின் பெறுமானம் யாது?


1) 12 2) 8 3) 11


12. மணியம் அவரது வயதைக் கேட்டால் நேரடியாக கூறாமல் இப்படிக் கூறினார். என் வயதில் உள்ள இரு இலக்கங்களை கூட்டினால் 9 வரும். அவ்விரு இலக்கங்களையும் இடம் மாற்றினால் என் வயதில் ஒன்பது கூடிவிடும் என்றார். அப்படியானால் மணியத்தின் வயது யாது?


1) 36 2) 45 3) 54


13. ஒரு தாள் x முறையே 1 2 3 என்னும் புள்ளிக்கோடுகள் வழியே மூன்று தடவைகள் மடிக்கப்படுகிறது. மூன்றாவதாக மடிக்கப்பட்ட விளிம்பின் மத்தியில் உரு y இல் காட்டப்பட்டவாறு ஒரு முக்கோணப்பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின்னர் தாளை விரித்து பார்த்தால் காணக்கிடைக்கும் உரு எது?






1) 

2) 

3) 



14. உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்.

1) $\frac{1}{2}$ 2) $\frac{2}{3}$ 3) $\frac{1}{4}$

15. ஒருவகுப்பில் 12 பிள்ளைகள் உள்ளனர். ஆசிரியர் அவர்களை A,B என்னும் இருகுழுக்களாக பிரித்தார். குழு A இல் இருந்து ஒரு சிறுவன் குழு Bயிற்கு மாற்றப்பட்டால் இரு குழுக்களிலுமான எண்ணிக்கை சமனாக அமையும். குழு B இல் இருந்து ஒரு சிறுவன் A குழுவிற்கு மாற்றப்பட்டால் குழு A இன் எண்ணிக்கை குழு B இன் எண்ணிக்கையின் இரு மடங்காக இருக்கும் குழு A இல் எத்தனை சிறுவர்கள் இருக்கிறார்கள்?

1) 7 2) 5 3) 8

16. வாசுகியின் தாய் மேமாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு சென்றார். அவர் இன்னும் ஆறு வாரங்களின் பின்னர் (வெள்ளிக்கிழமை) வைத்திய பரிசோதனைக்கு செல்ல வேண்டும் எனின் அவர் வைத்தியபரிசோதனைக்கு செல்ல வேண்டிய திகதி யாது?

1) ஜூன் 15ஆம் திகதி 2) ஜூன் 17ஆம் திகதி 3) ஜூன்16ஆம் திகதி

17. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறை யாது

A - வாயை ஊறச்செய்யும் B- ஏற வேண்டும் தம்பி

C - வட்டமான பழங்கள் D - எட்டிப்பறிக்கலாமே?

1) DBAC 2) BACD 3) CADB

18. கோமதி கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய மூன்று பாடங்களிலும் பெற்ற சராசரி புள்ளி 90 ஆகும். அவள் கணிதபாடத்தில் 94புள்ளிகளும், தமிழ்பாடத்தில் 88புள்ளிகளும் பெற்றாள். அவள் சுற்றாடல் பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

1) 88புள்ளிகள் 2) 85புள்ளிகள் 3) 81புள்ளிகள்

19. அனுபவம் முதிர்ந்தவர்கள் கூறும் புத்திமதிகள் எப்போதும் நல்லதாகவே இருக்கும். என்ற பொருள் தரும் பழமொழி?

1) மூத்தோர் சொல் வார்த்தை அமுதம் 2) ஆனைக்கும் அடிசறுக்கும்

3) சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது.

20. அருகில் தரப்பட்ட சந்திரனின் தோற்றம் மேமாதம் 28ஆம் திகதி இரவு வானில் தென்பட்ட தோற்றமாகும். அதன்படி பௌர்ணமி தினம்



1) மேமாதம் 21 2) மேமாதம் 6 3) ஜூன் மாதம் 5

21. பழவியாபாரி ஒருவர் அப்பிள்களும், தோடைகளுமாக சேர்த்து 35 பழங்கள் விற்பனை செய்தார். அப்பிள் 35 ரூபா வீதம் தோடை 40 ரூபா வீதம் விற்பனை செய்து ரூபா 1300ஐ பெற்றுக்கொண்டர். எனின் விற்ற அப்பிள்களின் எண்ணிக்கை யாது?

1) 25 2) 20 3) 15

22. பெயராகவும், வினையாகவும் வரக்கூடிய சொற்கள் அடங்கிய விடை எது?

1) குடி, கலை, மழை 2) கரை, பார், பாய் 3) நகை, படி, சோலை

23. நெஞ்சம் கலங்கினான் என்ற தொடரின் கருத்து,

1) மனம் வருந்தினான் 2) மனம் மகிழ்ந்தான் 3) பயமடைந்தான்

24. வீதியில் செல்லும் பேருந்து ஒன்றில் கட்டாயம் இருக்கக்கூடியவர்

1) பயணி 2) நடத்துநர் 3) சாரதி


25.  இவ்விரு உருக்களையும் சேர்க்கும் போது கிடைக்கும் உரு எது?

1)  2)  3) 




26. விபுலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே தவறாது சேவையில் ஈடுபடுகின்றது. காலையில் பாடசாலை மாணவர்களையும், வேலைக்குச் செல்பவர்களையும் ஏற்றிவரும் பேருந்து மாலை 5 மணிக்கு மீண்டும் ஊருக்கு திரும்பி வரும். தினமும் தவறாது பாடசாலைக்கு வரும் விபுலன் இன்று பாடசாலைக்கு வரவில்லை இதற்கான காரணம்.


1) பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை
2) பேருந்து சேவையில் ஈடுபடாமை
3) பேருந்தை அவன் தவறவிட்டமை

27. சதுரவடிவ கடதாசி ஒன்றை நான்காகமடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறு முக்கோணப் பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ள விதத்தை உரு A காட்டுகிறது. கடதாசியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவைக் காட்டும் விடையை தெரிக.



A

1)  2)  3) 

28. 

தரப்பட்டுள்ள வெட்டுருவை மடித்து ஒட்டினால் Vக்கு எதிராக வரும் எழுத்து எது?

1) T 2) R 3) A


29. புத்தளம் என்பது GHMNP எனவும் அம்பாறை என்பது BPKA எனவும் எழுதப்பட்டது. மாத்தறை என்பது எவ்வாறு எழுத முடியும்?

1) VDJC 2) THMA 3) AHMP

30. $18 \times 0 + 7 = \square$ கணித செய்கையின் படி கட்டத்தினுள் வரவேண்டிய விடை எது?

1) 25 2) 07 3) 11

www.ikedu.lk

31.  எனின்  → .....

1)  2)  3) 

❖ **பொருட்களின் விலைகளை அடிப்படையாக கொண்டு 32ஆம், 33ஆம் வினாக்களுக்கு விடை தருக.**


1 சவர்க்காரம் 1 உப்புபைக்கற்று	2 சவர்க்காரம் 3 உப்புபைக்கற்று
ரூபா 80.00	ரூபா 208.00

32. உப்புபைக்கற்று ஒன்றின் விலை யாது? 1) 48.00 2) 36.00 3) 52.00

33. சவர்க்காரம் ஒன்றின் விலை யாது? 1) 28.00 2) 30.00 3) 32.00


34. 6, 8, 9 கூட்டிலுள்ள மூன்று இலக்கங்களினாலும் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது?

1) 72 2) 36 3) 48

35.  உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்.

1) $\frac{6}{16}$ 2) $\frac{6}{12}$ 3) $\frac{4}{12}$

36. இக்கோலத்தில் வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய எண் யாது?




1) 108 2) 58 3) 79

❖ **37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

37. மைவிழி , தவம்
புதுசு , வரகு,
திறமை , குருதி

அடைப்பினுள் உள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

அப்பு → புரவி → விறகு → ..... → ..... → .....

38.  இங்கு அதிகதடவை வந்துள்ள வடிவம் எது? .....

39. நேற்றைக்கு முதல் நாள் புதன்கிழமை எனின் நாளை மறுநாள் என்ன கிழமை ? .....

40. முரளியை விட கண்ணன் 5 வயது மூத்தவன். இன்னும் 5 ஆண்டுகளின் பின் அவர்களினது வயதுகளின் கூட்டுத்தொகை 45 ஆகும். கண்ணனுக்கு இப்போது எத்தனை வயது? .....

(40×2 ½ = 100 புள்ளிகள்)

www.lkedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

மஞ்சரி - 08

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

பெயர் : .....

(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

பெரிய கண்ணாடி போத்தல் ஒன்றை எடுத்து அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரை நிரப்புங்கள். கடல் நீலநிறம் என்பதால் நீல நிற மையை விட்டுத்தண்ணீரை நீலநிறமாக்குங்கள். போத்தலின் மீதிப்பகுதிக்குத் தேங்காய் எண்ணெய்யை நிரப்பி போத்தல் மூடியினை இறுக மூடி போத்தலை கிடையாக வைத்து மெதுவாக உருட்டுங்கள். உருட்டும் போது போத்தலினுள் இருக்கும் நீல நிற நீர் கடல் அலை போல உருண்டு புரளுவதைக் காணலாம்.

01. சமுத்திரம் என்ற பொருளைத்தரும் சொல்லை தெரிசெய்து எழுதுக? .....

02. சிறிய என்ற சொல்லின் எதிர் சொல்லைத் தருக?.....

03. போத்தலினுள் இடப்பட்ட இரு திரவங்களும் எவை? .....

04. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமானம் எது? .....

05. நீலநிறம் என்பதை பிரித்தெழுதுக? .....

06. 'எண்ணெய்' இச்சொல்லில் வந்துள்ள உயிர்க்குறி எது? .....

(06புள்ளிகள்)

(02) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து அதன் கீழ்கோடிடுக.

01. கண்டது கற்கப் ..... ஆவான் (பண்டிதன் , பன்டிதன்)

02. மனத்திற்கும் உடலுக்கும் ..... தரும் இடம் நாம் வாழும் இல்லங்களே

(உட்சாகத்தைக் , உற்சாகத்தைத்)

(02புள்ளிகள்)

(03) வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.

01. மீண்டும் எங்கள் பயணத்தைத் ..... (தொடர்ந்தனர் , தொடர்ந்தோம்)

02. தேயிலை தோட்டங்களை பார்வையிடும் எண்ணங்கள் எம்மிடம் .....

(அலைமோதின, அலைமோதியது)

03. தானியங்கிக் கணினியை அமெரிக்க கடற்படையே முதன்முதலில் .....

(பயன்படுத்தினர் , பயன்படுத்தியது)

(03புள்ளிகள்)

(04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக

01. படித்தவரது அருமைபெருமைதனை அறிந்து மரியாதை செய்ய வேண்டும்.

அருமை பெருமை என்பதன் கருத்து (பெரும்புகழ் , மிகச்சிறப்பு)

02. சிறுவர்கள் வாய்காட்டிப் பேசுதல் கூடாது. இங்கு வாய்காட்டுதல் எனும் மரபுத்தொடரின் கருத்து,

(எதிர்த்துப்பேசுதல் , அதிகமாகப் பேசுதல்)

(02புள்ளிகள்)

(05) பின்வரும் பிராணியின் இளமைப்பெயரை குறிப்பிடுக.

01. எலி .....

(01புள்ளிகள்)

www.lkedu.lk

(06) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01. கடவுள் உண்டு என நம்பிக்கை கொள்பவன் .....

(07) கீழே தரப்பட்டுள்ள சொற்களை பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக (02புள்ளிகள்

01. நீங்களும் / பார்த்து / இப்போது / மகிழ்கிறீர்கள் / என்னைப்

..... (02புள்ளிகள்

(08) ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. *What ..... you like?* *(is / do)*

02. *Please look at ..... (a / the) picture* (02புள்ளிகள்

(09) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

01. ஆயத்தமாகு ..... (02புள்ளிகள்

(10) தமிழில் கருத்தினை எழுதுக.

01. *I will sweep the class room* .....

02. *What did you buy?* ..... (02புள்ளிகள்

(11) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

01. பிள்ளைகள் விளையபடுகிறார்கள் ..... (01புள்ளிகள்

(12) சிங்கள சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

01. வம்(B)ப(ட்)டு ..... (01புள்ளிகள்

(13) நாட்டினுள்ளும் நாடுகளுக்கு இடையேயும் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக செய்தித்தாள்கள் போன்ற அச்சு ஊடகங்களும் மின்னஞ்சல் உட்பட இலத்திரனியல் ஊடகங்களும் பயன்பாட்டிலுள்ளன. இதற்கேற்ப வானொலி என்னும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. (எழுவாய் பயனிலை தொடர்பு சரியாக அமைவதோடு, ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும்.)

01. .....

02. .....

03. ..... (06புள்ளிகள்

(14) கணித வினாக்களுக்க விடை தருக.

01. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.

நாற்பத்தாறாயிரத்து நானூற்று தொண்ணூறு .....

02.

8	9	
		1
4		

பெட்டியினுள் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக? .....

03. நான்கு ஒரே அளவான செவ்வக வடிவங்களையும் இரண்டு சதுர வடிவங்களையும் பயன்படுத்தி ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் யாது? .....

04. சுயதீன தொலைக்காட்சியில் சமையல் குறிப்பு நிகழ்ச்சியானது 11.45 மணிக்கு ஆரம்பமாகி 13:00 மணிக்கு முடிவடைந்தது. ஆயின் அந்நிகழ்ச்சி எவ்வளவு நேரம் ஒளிபரப்பானது?.....

www.lkedu.lk

05. 1) இவ் எண்கோலத்தில் அடுத்து வரும் எண்ணை எழுதுக?


43, 51, 59 , ...


2) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்கு முறைக்கு ஏற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நீக்கப்பட வேண்டிய எண் எது?

72 , 46 , 36 , 18 , 9 .....

06. பரிசளிப்பு விழாவுக்காக 920 பேனைகள் கிடைத்துள்ளன. ஒரு பொதியில் 6 பேனைகள் வீதம் இருக்குமாறு எத்தனை பரிசுப்பொதிகளைச் செய்யலாம்? .....


07. வட்டத்தினுள் உள்ள எண்களில் 9 இன் மடங்குகளைத் தெரிவு செய்து எழுதுக? .....



08.  எதிரே தரப்பட்டுள்ள உருவில் ¼ஐ பென்சிலால் நிறந்தீட்டுக.

09. 1) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?.....


2) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க? .....



10. கீழே தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.

1) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை கட்டங்களுக்குச் சமனாகும். .....

2) ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1cmஉம் அகலம் 1cm உம் ஆகம். நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரசென்றிமீற்றராகும் .....



(28புள்ளிகள்)

(15) மிகச்சரியான விடையின் கீழ்கோடிடுக.

01. வாசனை அற்ற பூ

1) போகன்விலா 2) பவளமல்லிகை 3) செவ்வந்தி 4) மல்லிகை

02. கொடிகளில் காய்க்காதது?

1) பூசணி 2) பீர்க்கு 3) சுரைக்காய் 4) முருங்கை

03. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு

1) நீலப்புள் 2) ஆழகியசொர்க்கம் 3) சுண்டெலி 4) பச்சைவிரியன்

04. சக்தியைத் தரும் உணவு?

1) பசளி 2) போஞ்சி 3) பலாக்காய் 4) யானைக்கால்

05. விசர் நாய்கள் மூலம் பரவும் நோய் எது?

1) கொள்ளை 2) நீர்வெறுப்பு 3) யானைக்கால் 4) தைபொயிட்

06. வயல்களில் நாசம் விளைவிக்கும் எலிகளை உணவாகக் கொள்ளும் விலங்கு

1) நத்தை 2) முள்ளம்பன்றி 3) கீரி 4) ஆந்தை

www.lka.lk

07. பின்வரும் எப்பாத்திரத்தில் உணவைத் தயாரிக்கும் போது உப்பு இடுதல் உகந்ததன்று?
1) மட்பாத்திரத்தில் 2) பிளாத்திக் பாத்திரத்தில்
3) அலுமினியபாத்திரத்தில் 4) கண்ணாடிப்பாத்திரத்தில்

08. சுவரிலிலுள்ள ஆணி ஒன்றை பிடுங்குவதற்கு தேவைப்படுவது
1) குறடு 2) கவர்சுத்தியல் 3) உளி 4) அரம்

09. சிற்றினெல்லா எண்ணெய் பயன்படுவது
1) உணவு சமைப்பதற்கு 2) ஒத்தடம் வழங்குவதற்கு
3) நுளம்புக்கடியை தடுப்பதற்கு 4) வயிற்று வலியை போக்குவதற்கு

10. வளவே கங்கை கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம்
1) மாத்தறை 2) காலி 3) களுத்துறை 4) அம்பாந்தோட்டை

11. அம்பக்க தேவாலயம் பிரசித்திப் பெறுவதற்குக் காரணம்
1) பித்தளை வேலைப்பாடுகளுக்கு 2) சுவர் சித்திரங்களுக்கு
3) பின்னல் வேலைப்பாடுகளுக்கு 4) மரவேலைப்பாடுகளுக்கு

12. பின்னவெல யானைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம்,
1) கண்டி 2) கேகாலை 3) புத்தளம் 4) பதுளை

13. இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலையடைந்து சுதந்திரம் பெற்றது,
1) 1948 2) 1947 3) 1987 4) 1498

14. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் சிங்கத்தின் வாள் உணர்த்துவது?
1) நீதியான நேர்மையான ஆட்சி 2) ஆட்சி செய்யும் தலைவர்
3) தேசப்பற்று 4) இனஒற்றுமை

15. எல்லா இலங்கையின் நாணயத்தாள்களிலும் காணப்படும் கையொப்பங்களை இட்டோர்களுள் ஒருவர்
1) நாட்டின் ஜனாதிபதி 2) இராஜாங்க அமைச்சர்
3) நிதி அமைச்சர் 4) நாட்டின் பிரதமர்

16. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வளையங்களின் எண்ணிக்கை
1) 6 2) 5 3) 4 4) 7

17. கந்தளாய் குளத்தை கட்டிய மன்னன்?
1) மகாசேனன் 2) பண்டுகாபயன் 3) தேவநம்பிய தீசன் 4) இரண்டாம் அக்ரபோதி

18. ஞாயிறு தினங்களில் தேவாலயங்களுக்கு செல்வோர்?
1) இஸ்லாமியர் 2) பௌத்தர் 3) இந்து 4) கிறிஸ்தவர்

19. மட்பாண்டத்தொழிலில் பயன்படுவது,
1) பட்டை 2) துருத்தி 3) வனைசில்லு 4) சில்லும் அச்சாணியும்

20. முதன் முதலாக ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் ஒன்றை வென்ற இலங்கை வீரர்?
1) சுசந்திக்கா 2) கருஜயசேகர 3) ஜயந்தி உத்தும்பொல 4) டங்கன்வைட்

(30புள்ளிகள்)

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1


பெயர் : .....


மஞ்சரி -09


நேரம்: 45 நிமிடம்


புள்ளிகள் :


1ஆம், 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் உள்ள உருவை ஒத்த உருவை தெரிவு செய்க.


01. 


1) 


2) 


3) 

02. 

1) 

2) 

3) 

03.  எனின்  → .....


1) 

2) 

3) 

04. ஒரு கடிகாரத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிடமுள்ளுக்கும் இடையே உள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்க கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பம் பின்வரும் எந்நேரத்தில் காட்டப்படுகிறது?

1) 1மணி 30 நிமிடம் 2) 4மணி 30 நிமிடம் 3) 9 மணி 50 நிமிடம்

05. 

உருவில் உள்ள மூன்று வட்டங்களும் ஒன்றை ஒன்று ஒத்தவை. வட்டம் ஒன்றின் பரப்பளவு 40 சதுர சென்றிமீற்றர் எனின் நிழற்றிய பகுதியின் பரப்பளவு பற்றிய சரியான கூற்று

1) 20சதுர சென்றிமீற்றரிலும் கூடியது

2) 20 சதுர சென்றிமீற்றரிலும் குறைந்தது

3) 20சதுர சென்றிமீற்றர்

06. தற்போது சுமனாவின் வயது 13 வருடங்கள் ஆகும். அவனது தாயின் வயது தற்போது 37 வருடங்கள் ஆகும். தாயின் வயது 54 ஆகும் போது சுமனாவின் வயது யாது?

1) 35வருடங்கள் 2) 30 வருடங்கள் 3) 32 வருடங்கள்

07. மாறா வேகத்தில் செல்லும் பார ஊர்தி ஒன்று சமதூரத்தில் நடப்பட்டிருக்கும் 4 மின்கம்பங்களை கடப்பதற்காக 3நிமிடங்கள் எடுத்தது எனின் 8 மின்கம்பங்களை கடப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

1) 8 நிமிடம் 2) 7 நிமிடம் 3) 6 நிமிடம்

08. முப்பதாயிரத்து முந்நூற்று பத்து என்பதை குறிக்கும் குறியீடு எது?

1) ❖✯❖✳▲ 2) △○△*○ 3) ✖✪▲✡✉

www.ikedu.lk

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

09. வட்டம் , சுவை , பச்சை, கண், இனிப்பு தரப்பட்ட சொற்களில் ஒன்று வேறுபட்டது. வேறுபட்ட சொல்லை தெரிவு செய்க.

1) வட்டம் 2) பச்சை 3) கண்

10. 

முழு உருவினதும் சுற்றளவு நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?

1) 3மடங்கு 2) 4மடங்கு 3) 5மடங்கு

11. தம்பதி - பதிகம் - கம்பளி - ..... சொற்கோலத்தில் அடுத்து வரும் சொல்லை தெரிவு செய்க.

1) பளிங்கு 2) கம்பம் 3) பதிப்பு

12. பெப்ரவரி மாதத்தில் 29 நாட்களை உடைய நெட்டாண்டாகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நெட்டாண்டு வரும். 2004ஆம் ஆண்டு நெட்டாண்டாகும் பின்வரும் எந்த ஆண்டுகள் நெட்டாண்டுகள் ஆகும்.

1) 2014 , 2018 2) 2016, 2020 3) 2015 , 2019

13. 6m நீளமான கம்பியில் இருந்து 75 cm நீளமான எத்தனை கம்பித் துண்டுகள் வெட்ட முடியும்.

1) 6 2) 8 3) 12


14ஆம், 15ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க

14. பரவை - கடல் எனின் அளை - .....

1) புற்று 2) கூப்பிடுதல் 3) வண்டு

15. இந்தியா - ஆண்மையில் எனின் அவுஸ்ரேலியா -.....

1) கிவி 2) கழுகு 3) கங்காரு

16. 

உருவின் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 10 3) 9

17. திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 திருக்குறள்கள் உள்ளன. எனின் மொத்தமாக எத்தனை திருக்குறள்கள் உள்ளன?

1) 133 2) 103 3) 1330

18. அறுபதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழாவை குறிக்கும் சொல்

1) வெள்ளி விழா அல்லது பொன் விழா

2) வைரவிழா , அல்லது பவளவிழா

3) மணிவிழா அல்லது வைரவிழா

19. ராதிகா பாடசாலைக்கு வந்தது பரிதா வந்த பின்னராகும். யாழினி வந்த பின்னரே பரிதா வருகை தந்தாள். அமானி வருவதற்கு முன்னர் ராதிகா வந்து விட்டாள். இவர்களில் பாசாலைக்கு முதலிலும், இறுதியிலும் வந்தர்கள் முறையே,

1) யாழினி , ராதிகா 2) பரிதா , அமானி 3) யாழினி , அமானி

20. 10ரூபா தொடக்கம் 1000ரூபா வரையான காசுத்தாள்கள் ஒவ்வொன்று வீதம் எடுத்தால் அவற்றின் மொத்தப் பெறுமதி யாது?

1) 1680.00 2) 1720.00 3) 1530.00

www.lkedu.lk

21. பேருந்து ஒன்றில் 40 வளர்ந்தவர்கள் அமர்ந்து செல்லமுடியும். அல்லது 60 சிறுவர்கள் அமர்ந்து செல்லமுடியும். குறிந்த பேருந்தில் 30 பெரியவர்கள் மட்டுமே அமர்ந்து இருந்தனர். எனின் இன்னும் எத்தனை சிறுவர்கள் அமர்ந்து செல்ல முடியும்?

1) 10பேர் 2 15பேர் 3) 8பேர்

22. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிந்து கோடிடுக

தசரதன் தனது குருவான ..... முனிவரின் ஆலோசனைப்படி புத்திரப்பேற்றை விரும்பி ..... செய்தான்

1) வசிட்ட, யாகம் 2) மாதங்க , கேள்வி 3) விசுவாமித்திர ,தியாகம்

23. இன்று புதன்கிழமை, நாளை மறுநாள் 20ஆம் திகதி எனின் நேற்றைக்கு முதல்நாள் என்ன கிழமை எத்தனையாம் திகதி?

1) திங்கட்கிழமை , 15ஆம் திகதி 2) திங்கட்கிழமை , 16 ஆம் திகதி

3) ஞாயிற்றுக்கிழமை, 17 ஆம் திகதி


24. மார்ச்மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை எனின் மார்ச்மாதம் இறுதி நாள் என்ன கிழமை?


1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) புதன்கிழமை


25. நான் காலை வேளையில் கடற்கரை வழியே செல்லும் போது எனது இடது கைப்பக்கம் சூரியன் உதிப்பதை கண்டேன். நான் சென்ற திசை யாது?


1) மேற்கு 2) வடக்கு 3) தெற்கு

26. யமுனா தனது வீட்டில் இருந்து கிழக்கு நோக்கி 50m சென்று பின் தனது வலதுகை பக்கமாக திரும்பி 50m தூரம் சென்று பின் தனது இடது கைபக்கமாக திரும்பி 50m தூரம் சென்றாள். அவள் சென்ற பயணப்பாதையை காட்டும் உரு எது?

1) 

2) 

3) 

27. 

உருவில் உள்ள திண்மத்தில் இருக்கும் மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது?

1) 12 2) 13 3) 10


நான்கு மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்த நேரங்களை நான்கு கடிகாரமுகங்கள் காட்டுகின்றன. அதன் உதவியுடன் வினாக்களுக்குரிய விடையை தெரிக.




மேரி



பரிஹா



இமானா



நிரோஷா

28. பாடசாலைக்கு முதலில் வருகை தந்தவர் யார்?

1) இமானா 2) மேரி 3) பரிஹா

29. நிரோஷா வருகை தந்து எவ்வளவு நேரத்தின் பின்னர் இமானா பாடசாலைக்கு வந்தார்?

1) 25நிமிடங்களில் 2) 15நிமிடங்களில் 3) 20நிமிடங்களில்

30. நிமலின் வயதை போல மூன்று மடங்கு அவன் தாயின் வயது அதன் படி அவர்கள் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகையாக இருக்கக்கூடியது?

1) 48 2) 43 3) 46

www.lkedu.lk

31. தகரப்பேணியுடன் பால்மாவின் நிறை 1kg ஆகும். அதிலிருந்து அரைவாசி பால்மாவை வெளியே எடுத்த பின் நிறுத்த போது நிறை 600g ஆகும் வெற்றுதகரப்பேணியின் நிறை யாது?

1) 200g 2) 400g 3) 100g

பின்வரும் வினாக்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத்தரும் விடையை தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

32. பெரியோர் கூறும் **புத்திமதிகளை** நாம் ஒரு போதும் **உதாசீனம்** செய்யக்கூடாது


1) அறிவுரை, அலட்சியம் 2) அனுபவம், தீமை 3) அறிவு, அசுத்தம்

33. **பழமை** வாய்ந்த கட்டடங்கள் **இடிபாடு** அடைந்துள்ளன.

1) புதுமை, சண்டை 2) புராதனம், உறுதி 3) தொண்மை, சிதைவு

34. அண்மையில் உள்ள துறைமுகத்தில் **மாலுமி** கப்பலை நங்கூரமிட்டார்.

1) பக்கத்தில், பாகன் 2) தொலைவில், சாரதி 3) அருகில், மீகாமன்


35. 

நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு 12cm எனின் முழு உருவின் சுற்றளவு யாது?

1) 48cm 2) 36cm 3) 32cm

36. இன்று ஞாயிற்றுக்கிழமை நேற்றைக்கு முதல் நாளுக்கும் கடந்த திங்கட்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் உள்ளன?

1) 2 2) 4 3) 3


37. 

வெற்று வட்டத்திற்கு வரவேண்டிய இலக்கம் யாது?


1) 9 2) 8 3) 6


38. பாரதி தமிழ் மகாவித்தியாலயம் 2013ஆம் ஆண்டு தனது வைரவிழாவை கொண்டாடியது. எனின் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1) 1963 2) 1953 3) 1945




39. 

வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியை தெரிக.

1)  2)  3) 

40. 

தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டினால் பெறப்படும் வடிவம் எது?

1)  2)  3) 

(40×2 ½ = 100 புள்ளிகள்)

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

பெயர் : .....

மஞ்சரி - 09

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

(01) பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க

நீல வானம் இருண்டது
நெடிய மேகம் திரண்டது
மேளம் போல இடித்தது
மின்னல் வானில் வெடித்தது

சீறிக் காற்றும் எழுந்தது
சேர்ந்து மழையும் பொழிந்தது
பாறி மரமும் வீழ்ந்தது
பாய்ந்து வெள்ளம் வழிந்தது

01. வானில் வெடித்தது எது? .....

02. முகில் என்பதன் ஒத்தக்கருத்துச்சொல்? .....

03. திரண்டது எனும் சொல்லின் இறுதி எழுத்தில் வந்துள்ள உயிர்க்குறி எது? .....

04. வெள்ளம் வழிந்தோடுவதற்கு காரணமாக அமைந்தது எது? .....

05. பாடலில் இடம்பெற்றுள்ள உவமானம் எது? .....

06. முதலாம் பாடலில் இடம்பெற்றுள்ள ஒரே ஓசையைத்தரகூடிய இரு சொற்களும் எவை?

1..... 2.....

(07புள்ளிகள்)

(02) தரப்பட்டுள்ள தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

01. தாகத்திற்கு நீர் போல பசிக்கு ..... (சோறு , உணவு)

02. கரும்பு தித்திக்கும் போல பாகற்காய் ..... (உவர்க்கும் , கைக்கும்)

03. பூவோடு சேர்ந்த .....மணக்கும். (இதழும் , நாரும்)

04. முகம் மலர்தல் எனும் மரபுத்தொடரின் கருத்து ..... (மகிழ்ச்சி அடைதல் , விழித்தெழுதல்.)

05. பசு ..... மேய்ந்தது. (புல் , புள்) (05புள்ளிகள்)

(03) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

01. மைதானத்தின் நடுவில் பல நிறங்களில் ..... (பலூன், பலூன்கள்) கட்டப்பட்டிருந்தன.

02. பெற்றோர்களுக்கென தனியாக இருக்கைகள் ..... (ஒதுக்கப்பட்டிருந்தது, ஒதுக்கப்பட்டிருந்தன.)

03. அதிபரும், பெரியவரும் மேடையில் ..... (அமர்ந்தார் , அமர்ந்தனர்)

04. பசியும் தாகமும் நரியை ..... (வாட்டியது , வாட்டின) (04புள்ளிகள்)

(04) வெற்றிடத்திற்குப் பொருத்தமான தனிச்சொல்லை தெரிவு செய்து அதன்கீழ்கோடிடுக.

01. நாய்க்கு கடுவன் போல கோழிக்கு - ..... (பேடு , சேவல்)

02. இக்கரை மாட்டுக்கு ..... (இக்கரை பச்சை , அக்கரை பச்சை)

03. படிப்பேன் என்பது.....(எதிர் கால தன்மை வினைச்சொல் ,எதிர்கால பன்மை வினைச்சொல்)

(05) வினாக்களுக்கு விடை தருக. (03புள்ளிகள்)

இந்த உலகில் நீங்கள்
.....
தந்தை தாயை பேணும்
தருமம் ஒன்றே பெரிது

01. இடைவெளிக்கு வரவேண்டிய பாடல் அடியை எழுதுக. .....

02. உலகிலே போற்றும் மிகப் பெரிய தருமம் எது? .....

(04புள்ளிகள்)

www.lkedu.lk

(06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் **கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. *I will bring flowers* .....

02. *What's this* .....

(04புள்ளிகள்)

(07) ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. *These are my ..... (book / books)*

02. *Pencil ..... (is / are) in the box* (02புள்ளிகள்)

(08) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி, **ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

01. நாம் தயாராகுவோமா? .....

(02புள்ளிகள்)

(09) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை **தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

1. அம்மா வீட்டுக்கு வருகிறார் .....

(01புள்ளிகள்)

(10) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் **கருத்தை தமிழில் எழுதுக.**

01. மினிஸ்ஸொ பொல(ட்)ட எனவா .....(01புள்ளிகள்)


11. இலங்கையின் மிகவும் நீளமான நதி மகாவலி கங்கையாகும். **"நான் மகாவலிகங்கையாவேன்"** என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

- .....
- .....
- .....

(06புள்ளிகள்)

(12) கணித வினாக்களுக்கு விடை தருக.

01. உருவில் காணப்படும் சதுரத்தில் இரு சமச்சீர் கோடுகளை வரைக.



02. பின்வரும் எண்களுக்குப் பொருத்தமான உரோமன் எண்ணை தெரிவு செய்து கோடிடுக.


1) 15 ..... (xv / vx) *2. 16* ..... (xiv / xvi)

03. ரூபா *35* விலையுள்ள ஒரு கொப்பியையும் ரூபா *15.50* விலையுள்ள ஒரு பென்சிலையும் வாங்கி *100* ரூபா தாள் ஒன்றினை கொடுக்கும் போது கிடைக்கும் மீதி யாது? ரூபா ..... சதம்.....

04. மாலாவின் அப்பாவின் நிறை மாலாவின் நிறையில் *3*மடங்காகும் அப்பாவின் நிறை *54kg 750g* எனின் மாலாவின் நிறை யாது? .....

05. *4050* மீற்றரில் எத்தனை கிலோமீற்றர்களும் , மீற்றர்களும் உள்ளன. .....கிலோமீற்றர் ..... மீற்றர்


06.



தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்ப புள்ளிக்கோட்டிற்கு வரவேண்டிய விடையை எழுதுக. .....

www.lkedu.lk


07. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரங்களுக்கு சமம்? .....



08. ஒரு பிள்ளைக்கு 6 பென்சில்கள் வீதம் 650 பென்சில்களை எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்கலாம்?

.....

09. கடிகாரம் Aயின் முகத்தில் காணப்படும் நேரம் பி.ப. 5மணி 30 நிமிடமாகும். அதனை B கடிகாரத்தின் முகத்தில் இலக்கங்களை குறிப்பிட்டுக் காட்டுக.






10. சில நகரங்களுக்கு இடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கீலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

		புத்தளம்
	கொழும்பு	142
காலி	116	.....
மாத்தறை 45	161	303

காலியில் இருந்து கொழும்பினூடாக புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது?

.....km

11. ஒரு குழுவில் உள்ள மாணவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் பழங்கள் பற்றி கேட்கப்பட்டு தகவல்கள் குறிக்கப்பட்டன.




1. அன்னாசிப் பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....


2. கொய்யாப் பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் வாழைப் பழத்தை குறைவாக விரும்புகின்றனர்?

.....

12. 

இவ்வுரு நான்முகியை குறிக்கின்றது எனின் இத்திண்மத்திற்குள்ள தட்டையான மேற்பரப்புக்கள் எத்தனை? .....

13. பின்வரும் எண்கோலத்தை பூர்த்தி செய்க. 6035 , 6050 , 6065 , 6080 , ... , ...

14. 

உருவிற்கு பொருத்தமான பின்னத்தை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக?

$\left(\frac{5}{8} \quad \frac{2}{4} \quad \frac{3}{4} \quad \frac{3}{8}\right)$ .....

15. 40 , 48 , 36 , 46 , 52 நான்கின் மடங்கு அல்லாத எண்ணை தெரிவு செய்து எழுதுக? .....

(13) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக. (30புள்ளிகள்)

01. இலங்கையின் தேசிய மரம் எது?

1) நாகமரம் 2) நீலஅல்லி 3) அரச மரம் 4) நாகலிங்கமரம்

02. மேசை விரிப்பை சுற்றி வர தைப்பதற்கு பொருத்தமான தையல் முறை

1) மீன்முள்ளுத்தையல் 2) சங்கிலித்தையல் 3) கம்பளித்தையல் 4) நரம்புத்தையல்

www.ikedu.lk

03. நறுமணம் உள்ள மலர்

1) வெட்சி 2) வாகை 3) நந்தியாவட்டை 4) மல்லிகை

04. தண்ணீரில் மிதப்பது,

1) இரும்பாணி 2) கை ஊசி 3) பஞ்சுத்துண்டு 4) பென்சில்

05. குழு விளையாட்டு எது?

1) மேசைப்பந்து 2) கரப்பந்து 3) டெனிஸ் 4) பூப்பந்து

06. வில்பத்து தேசிய வனப்பூங்கா அமைந்துள்ள மாகாணம்.

1) தென்மாகாணம் 2) வடமாகாணம் 3) மேல்மாகாணம் 4) வடமத்தியமாகாணம்

07. தேசப்படத்தில் கடல்பரப்பை காட்டுவதற்கு பயன்படுத்தும் நியம நிறம்,

1) நீலம் 2) பச்சை 3) கபிலம் 4) இளம்பச்சை

08. தேசிய இலட்சினையில் உலக நிலைப்பாட்டை வலியுறுத்துவது

1) பூவிதழ்கள் 2) வாளேந்திய சிங்கம் 3) சூரிய சந்திரன் 4) நெற்கதிர்

09. விவசாய கைத்தொழிலில் பயன்படுவது?

1) கரப்பு 2) கலப்பை 3) தள்ளுவண்டி 4) துருத்தி

10. நீரில் மட்டுமே வாழ்வது,

1) நண்டு 2) ஆமை 3) தேரை 4) திமிங்கிலம்

11. இலங்கை நாட்டுக்குரித்தான விலங்கினம்,

1) காட்டுத்தாரா 2) காகம் 3) மாடப்புறா 4) நீலப்புள்

12. இலங்கைக்கு கிழக்கில் அமைந்திருக்கும் நாடு,

1) தாய்லாந்து 2) பாகிஸ்தான் 3) இந்தியா 4) இங்கிலாந்து

13. எனது உள்ளத்தில் தோன்றிய நல்லெண்ணம்,எனது நண்பனின் உள்ளத்திலும் தோன்றட்டும் இது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் எத்தனையாவது?

1) படி - 2 2) படி - 3 3) படி - 4 4) படி - 5

14. சூழலுக்கு ஏற்ப நிறத்தை மாற்றும் திறமைக்கொண்ட விலங்கினம் எது?

1) பஞ்சவர்ணக்கிளி 2) பச்சோந்தி 3) மலைப்பாம்பு 4) மயில்

15. வீதியில் உள்ள மின்சைகைப் பலகையில் பச்சை நிறம் ஒளிர்வதனால் குறிப்பிடப்படுவது?

1) வாகனத்தை நிறுத்துக. 2) வாகனத்தை வலமாக திருப்புக.

3) வாகனத்தை செலுத்துக. 4) வாகனத்தை செலுத்த தயாராகுக.

16. பயற்றம் வித்துக்களில் அடங்கும் போசணைப்பொருள்,

1) விற்றமின்கள் 2) காபோவைதரேற்றுக்கள் 3) உப்புக்கள் 4) புரதங்கள்

17. பூமிக்கு இரவு வேளைகளில் ஒளியைத்தருவது

1) சூரியன் 2) சந்திரன் 3) கோள்கள் 4) செய்மதிகள்

18. மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்ட குளம்,

1) மகாகணதரா வாவி 2) திசாவாவி 3) யோதவாவி 4) அபயவாவி

19. தொடர்பாடலுக்கு பயன்படும் பிரசித்திபெற்ற அச்சுஊடகம்

1) செய்திப்பத்திரிகை 2) வானொலி 3) தொலைக்காட்சி 4) தொலைபேசி

20. வானவில் நிறங்களில் ஒன்று,

1) கறுப்பு 2) வெள்ளை 3) ஊதா 4) சாம்பல்

(30புள்ளிகள்)

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 1

மஞ்சரி -10

நேரம்: 45 நிமிடம்

பெயர் : .....

புள்ளிகள் :

1தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.


1ஆம், 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவை பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

01. 

1) 

2) 

3) 


02. 

1) 

2) 

3) 


தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை அந்த இரண்டு உருக்களும் எவை

03. 

1) Aஉம்,Bஉம்

2) Aஉம்,Cஉம்

3) Bஉம்,Cஉம்


04. 




1) xஉம்,yஉம்

2) yஉம்,zஉம்

3) xஉம்,zஉம்

05. உருக்கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்கு இருக்க வேண்டிய உரு எது?




..... 1)  2)  3) 

06. தங்கத்தாம்பாளம் என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்கமுடியாத சொல் எது?

1) பாதகம் 2) பாதாளம் 3) தாராளம்

07. உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டங்களினதும் நீளமும் அகலமும் சமம். சதுரரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



1) 16 2) 18 3) 20

08. 3, 4 ஆகிய இரு எண்களினாலும் மீதியின்றி வகுபட கூடியனவும் 10க்கும் 50க்கும் இடையே உள்ளனவுமான எண்களின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 4 3) 8

09. ✤✆✤✦✡✤✤★ - KMPRTPKV ஆகும். இதற்கேற்ப வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க. ✤✡✆★✤✤✆ - .....

1) PTMVKPM 2) PTVKPTM 3) PTMKVMT

www.kpedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

10. தரப்பட்ட வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பந்தி ஒன்றை உருவாக்க முடியும் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ்கோடிடுக.

A - இயற்கை எழிலோடு சேர்ந்த அழகிய நகரம் அது.

B - பூத்துக்குலுங்கும் மரங்களும், மலைத்தொடர்களும் நிறைந்திருந்தன.


C - எல்லாவற்றையும் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தோம்.

D - நாங்கள் கண்டி மாநகருக்கு சென்றோம்.

E - இவை இரண்டும் கண்டியை தேவலோகம் போல திகழச்செய்தது.

1) DBECA 2) BCADE 3) DABEC

11. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.




1)  2)  3) 

.....


12. பண்ணை ஒன்றில் ஆடுகளும் கோழிகளுமாக 24 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 68 ஆகும் பண்ணையில் உள்ள ஆடுகள் கோழிகள் எண்ணிக்கை முறையே,

1) 10, 14 2) 12 , 12 3) 9 , 15

13. உரு 1இல் உள்ள வட்டக்கடதாசியை உரு 2இல் உள்ளவாறு நான்காக மடித்து உரு 3இல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து மீதிப் பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?



உரு1 உரு2 உரு3

1)  2)  3) 

14. தொள்ளாயிரத்து எழுபத்தைந்தை குறிக்கும் விடை எது?

1) 475 + 225 + 150 + 200 2) 250 + 125 + 275 + 225 3) 150 + 375 + 275 + 175

15. விளையாட்டுப்போட்டி ஒன்றில் நீலநிறக் கொடி ஒன்றும் சிவப்பு நிறக்கொடி இரண்டும், பச்சைநிறக்கொடி இரண்டும் என்ற ஒழுங்கில் மாறிமாறி கட்டப்பட்டன. முதலாவது கொடி நீல நிறம் எனின் 28வது கொடி என்ன நிறம்?

1) நீலம் 2) பச்சை 3) சிவப்பு

16. ஜனவரி மாதத்தில் நடுவில் வரும் திகதி யாது?

1) ஜனவரி 14 2) ஜனவ்ரி- 15 3) ஜனவரி 16

17ஆம்,18ஆம் வினாக்களில் உள்ள எண்கோலங்களில் -?- வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணை தெரிந்து கோடிடுக.

17.

3	7
21	31

4	9
36	49

6	5
30	.....

1) 41
2) 51
3) 35

18.

6	9	12
20	14	8
18	.....	12

1) 18 2) 15 3) 21

19. சிங்கம் கர்ச்சிக்கும் எனின் புறா .....

1) கீச்சிடும் 2) பேசும் 3) குறுகுறுக்கும்.

www.1kedu.lk

20. ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பை தெரிவு செய்க.

1) கண் விழி நயனம்

2) சமுத்திரம் ஆழி பரவை

3) காடு வானம் பூமி

21. இலங்கை , மத்தியமாகாணம், கண்டி இவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் உரு எது?

1) 

2) 

3) 

22. ஒரு ஆடியில் விம்பமாக காட்சி தருகையில் மாற்றமின்றி தெரியும் உருக்கள் கொண்ட விடை எது?

1) 

2) 

3) 

23. 32 64 ....

பெட்டியில் உள்ள இரு வெற்றிடங்களிலும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றையதன் இரு மடங்காகும். பெட்டியில் உள்ள நான்கு எண்களின் கூட்டுத்தொகை 150 ஆகும். வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்கள் யாவை?

1) 24, 48 2) 18 , 36 3) 16 , 32


24. ரவி மு.ப. 8.30 தொடக்கம் மு.ப. 9.45மணிவரை பாடம் படித்தான். ரேவதி மு.ப.9மணி தொடக்கம் மு.ப. 10மணி வரை பாடம் படித்தாள். முரளி மு.ப.8.45மணி தொடக்கம் மு.ப.9.30மணி வரை பாடம் படித்தான். மூன்று பேரும் ஒன்றாகவே பாடம் படித்த நேரம்?


1) 30நிமிடங்கள் 2) 45நிமிடங்கள் 3) 1மணித்தியாலம்


25. மிகச்சரியாக கருத்து இடம்பெறும் வாக்கியத்தை தெரிவு செய்க.


1) ஒரு நாட்டின் கல்வியிலேயே அங்குள்ளவர்களின் பெருமை தங்கியுள்ளது.
2) ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியிலேயே தங்கியுள்ளது.
3) ஒரு நாட்டின் கல்வியிலேயே தங்கியுள்ளது அங்குள்ளவர்களின் பெருமை

26. தரப்பட்ட வடிவத்தை கொண்டு ஒரு சதுரமுகி அமைக்கும் போது அது தோன்றும் விதத்தை தெரிவு செய்க.



1) 

2) 


3) 


27. கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்றில் 6 அணிகள் பங்குபற்றின. ஒவ்வொரு அணியும் மற்றய அணியுடன் ஒவ்வொரு போட்டியில் விளையாடவேண்டும். எனின் நடைபெற்ற போட்டிகள் எத்தனை?


1) 30 2) 18 3) 15

28. முதலில் தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது தோன்றும் வடிவம் யாது?



1) 

2) 

3) 

29. சரியான கோவையின் கீழ்க்கோடிடுக.

1) 3 x 5 x 0 = 15 2) 9 + 8 + 27 = 44 3) 6 x 5 + 7 = 18

30. இல்ல விளையாட்டுப்போட்டி ஒன்றில் பாரதி இல்லம் நாவலர் இல்லத்தை விட அதிக புள்ளிகளை பெற்றாலும் வள்ளுவர் இல்லத்தை விட குறைவாக புள்ளிகளை பெற்றது. இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தை பெற்ற இல்லங்கள் முறையே,

1) வள்ளுவர், பாரதி, நாவலர் 2) பாரதி , நாவலர், வள்ளுவர் 3) நாவலர், வள்ளுவர், பாரதி

www.lkedu.lk

31. இலங்கைக்கு மேற்கே இங்கிலாந்தும் கிழக்கே தாய்லாந்தும் உள்ளன. இலங்கை நேரம் நண்பகல் 12 மணியாக இருக்கும் போது,

1) இங்கிலாந்தில் முற்பகலாக இருக்க வேண்டும். 2) தாய்லாந்தில் முற்பகலாக இருக்க வேண்டும்.

3) இங்கிலாந்து, தாய்லாந்து ஆகிய இரு நாடுகளும் பிற்பகலாக இருக்க வேண்டும்.

சில பழங்களின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

2 அப்பிள் 1 தோடை
95.00

1 அப்பிள் 1 தோடை
60.00

32. தோடை ஒன்றின் விலை யாது?

1) 35.00 2) 25.00 3) 30.00

33. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

..... பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ..... கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார்

1) மார்க்கோணி, தெலைக்காட்சியை 2) தோமஸ்அல்வாஎடிசன், மின்குமிழை

3) லூயிபாஸ்டர், கணினியை

34. கீழ்வரும் ஆங்கில சொற்களுக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. **ஆங்கில எழுத்துக்களின் ஒழுங்கில் இலக்கங்கள் எழுதப்படவில்லை** என்பதை கவனத்தில் கொள்ளவும்.

TEA -	**356**
BATA-	**5645**
TOP -	**796**

TABE என்னும் சொல்லுக்கு பயன்படுத்தப்படும் இலக்கங்கள் எவை?

1) 5436 2) 4356 3) 6543

35. வடமத்திய மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடும் என வானிலை அறிக்கையில் கூறப்பட்டது. அதன்படி இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய மாவட்டங்களாக இருக்க கூடியவை?

1) பொலன்நறுவை, வவுனியா 2) கேகாலை, புத்தளம் 3) அனுராதபுரம், குருநாகல்

36. மாதவன் முதலாந்தவணை பரீட்சையில் கணிதபாடத்தை விட 10 புள்ளிகள் கூடுதலாக தமிழ்பாடத்திலும், கணிதபாடத்தை விட 15 புள்ளிகள் குறைவாக ஆங்கில பாடத்திலும் பெற்றான். அவன் தமிழ் பாடத்தில் பெற்ற புள்ளிகள் 95 எனின் மூன்று பாடங்களிலும் பெற்ற மொத்த புள்ளிகள் எத்தனை?

1) 250 2) 260 3) 235

37. கொங்கிறீட் கலவை ஒன்றை தயாரிப்பதற்கு சீமெந்து கூடைகளின் இருமடங்கு மணற் கூடைகளும் மணற் கூடைகளில் மூன்று மடங்கு கருங்கற்கூடைகளும் எடுக்கப்பட்டன. 180கூடைகள் கருங்கற்கள் எடுக்கப்பட்டன எனின் கலவை ஒன்றுக்கு எடுக்கப்படவேண்டிய சீமெந்துக்கூடைகளின் எண்ணிக்கை யாது?

1) 45 2) 30 3) 60

38. இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக.

கணினியின் மையச்செயலகம் மனிதனின் ..... ஒப்பான பகுதியாகும்.

1) உடலுக்கு 2) மூளைக்கு 3) ஆற்றலுக்கு

39. நிர்மலா தவணை பரீட்சை ஒன்றில் 5 பாடங்களில் பெற்ற சராசரிப்புள்ளி 72 ஆகும். அவள் 6 பாடங்களில் பெற்ற சராசரிப் புள்ளிகள் 75 ஆகும். அவள் ஆறாவது பாடத்தில் பெற்ற புள்ளி யாது?

1) 75 புள்ளிகள் 2) 80புள்ளிகள் 3) 90புள்ளிகள்

40. ஒரு பையில் 4 நீல நிறப்பந்துகளும் 6 மஞ்சள் நிறப்பந்துகளும் உள்ளன. ஒரு மஞ்சள் நிறப் பந்தினை கட்டாயமாக பெற்று கொள்ள வேண்டுமாயின் பையில் இருந்து ஆகக்குறைந்த எண்ணிக்கையாக எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?

1) 6 2) 5 3) 10

(2½x40-=100புள்ளிகள்)

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களிற்கு நடாத்தப்படும் முன்னோடிப்பரீட்சை

பகுதி - 11

பெயர் : .....

மஞ்சரி - 10

நேரம்: 1மணி 15 நிமிடம்

புள்ளிகள் :

(01) பின்வரும் பந்தியை கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

"அண்ணா உன்னுடைய பிரிவைத் தாங்காமல் தந்தையும் உயிர் நீத்தார்." என பரதன் விம்மலுடன் கூறினான். தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இராமன் அடியற்ற மரம்போல் விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான்.

01. தமையன் என்ற சொல்லை தரும் மற்றொரு சொல்லை எழுதுக? .....

02. பிறந்தார் என்ற சொல்லின் எதிர் சொல்லை எழுதுக? .....

03. மயக்கம் நீங்கி எழுந்தவன் யார்? .....

04. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமானம் எது? .....

05. சுழிவிசிறியுடன் அரவும் சேர்ந்து வந்த சொல் எது? .....

06. உன்னுடைய என்ற சொல்லை பிரித்து எழுதுக? .....

(02) தரப்பட்டுள்ள தொடர்களுக்குரிய சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக. (06புள்ளிகள்)

01. மா, வாழை, ... என்பன முக்கனிகளாகும். (தோடை, பலா)

02. உலகப்பொது மறை என்பது ..... (மூதுரை, திருக்குறள்) ஆகும்.

03. நீரும் .....யும் எப்போதும் கலப்பதில்லை. (எண்ணெய், எண்ணை)

04. வானொலியை கண்டுபிடித்தவர் ..... (மார்க்கோனி, கிரகம்பெல்) ஆவார்.

05. கொக்கரக் கோ என்று சத்தம் இடுவது ..... (சேவல், கோழி)

(05புள்ளிகள்)

(03) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

பள்ளமான இடத்தினைப்
பார்த்துப்பாயும் வெள்ளம் போல்
.....
நாடி நாமும் பயிலுவோம்.

01. நூல்களை தேடி படிப்பதற்கு நாம் செல்லும் இடம் எது? .....

02. இடைவெளிக்கு வரவேண்டிய பாடல் அடியை எழுதுக? .....

03. பின்வரும் பிராணியின் இளமைப்பெயரை எழுதுக. எலி - .....

(04) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக. (06புள்ளிகள்)

செய்தித்தாள்கள் / அறிவை / உதவுகின்றன / கொள்ளச் / வளர்த்துக்

.....

(02புள்ளிகள்)

(05) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

01. பட்டதாரி மாணவர்கள் எம்மை அன்போடு ..... (வரவேற்றான், வரவேற்றனர்)

02. தேயிலைச் செடிகள் பச்சைப்பசேலென ..... (வளர்ந்திருந்தன, வளர்ந்திருந்தது.)

03. அலை மோதின என்ற தொடர் ..... (அஃறிணை பன்மை, உயர்திணை பன்மை)

04. கூழுக்கும் ஆசை ..... ஆசை (பாலுக்கும், மீசைக்கும்)

(04புள்ளிகள்)

www.lkedu.lk

(06) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் **கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. *shall we stop now?* .....

02. *Is this yours?* ..... (02புள்ளிகள்)

(07) ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. *I ..... to sing* *(wants / want)*

02. *Please do your home .....* *(work / works)* (02புள்ளிகள்)

(08) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி, **ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

01. தயவு செய்து படத்தைப்பாருங்கள் ..... (01புள்ளிகள்)


(09) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை **தமிழ் எழுத்துக்களில் எழுதுக**

01. இன்னும் வரவில்லை .....

(10) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் **கருத்தை தமிழில் எழுதுக.**

01. தவல் வெலா நான்ன ..... (02புள்ளிகள்)

(11) பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரை பூரணப்படுத்துக.



இடமிருந்து வலம்

01. தந்தையை இவ்வாறும் கூறலாம்.

மேலிருந்து கீழ்

02. ஆற்றைக் கடப்பதற்கு போடப்படும்.

03. மரங்களில் வாழும் தாவிப்பாயும் (03புள்ளிகள்)

12. இவ்வுலகில் உள்ள தாவரங்கள் அனைத்தும் இறைவனின் அரும்கொடையாகும். தாவரங்கள் இல்லாத சூழலை கற்பனைசெய்தும் பார்க்க முடியாது 'நான் ஒரு மரம்' என்னும் தலைப்பின் கீழ் மரத்தின் பயன்களை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

- .....
- .....
- .....

(06புள்ளிகள்)

(13) கணித வினாக்களுக்கு விடை தருக.

01. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துகளில் எழுதுக?

39049 .....

02. எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை உரோமன் இலக்கங்களில் எழுதுக.


1. பதினான்கு ..... 2. பதினேழு .....

03. அடுத்து வரும் எண்களை தரப்பட்ட வெற்றிடங்களில் எழுதுக.


3 , 5 , 6 , 10 , 9 , 15 . ..... , ...

04. பின்வரும் பின்னங்களை கூட்டுக. $\frac{3}{8} + \frac{1}{4} =$ ☐

www.lkedu.lk

05.  உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னமாக எழுதுக.

.....

06. 

வட்டத்தில் உள்ள எண்களை பயன்படுத்தி 8இன் மடங்குகளை எழுதுக.

..... , ...

07. அம்மா நூலகத்திற்கு சென்று 14: 40 மணித்தியாலத்திற்கு வருவதாகக் கூறி 40 நிமிடங்கள் தாமதமாகியே வந்தார். எனின் அம்மா வந்த நேரத்தை தருக? .....

08. பின்வருவன நிசார் வாங்கிய பொருள்களின் பட்டியலாகும்.

அ) ஒரு கிலோகிராம் ரூபா 67 வீதம் 3 கிலோகிராம் அரிசி

ஆ) ஒரு கிலோகிராம் ரூபா 375 வீதம் 500கிராம் தேயிலை

இ) ஒன்று ரூபா 495 வீதம் 2 பால்மா பைக்கற்றுக்கள்.

ஈ) 1லீற்றர் ரூபா 440வீதம் 1லீற்றர் 500மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெய்.


1) மேற்குறித்த தகவல்களுக்கேற்ப பொருள்களுக்காகச் செலுத்திய பணத்தை வெற்றிடங்களில் எழுதுக.

பொருள்	செலுத்திய பணம் ரூபா	சதம்
1. அரிசி	201	00
2. தேயிலை	.....	.....
3. பால்மா பைக்கற்று	990	00
4. தேங்காய் எண்ணெய்	.....	.....

2) எல்லா பொருட்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த பணம் யாது?

.....


09. பின்வரும் A அளவான மூன்று செவ்வக கீலங்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ள உரு கீழே தரப்பட்டுள்ளது. அதன் பரப்பளவை சதுரசென்றிமீற்றரில் தருக?



.....


10. ஒரு பாத்திரமானது முற்றாக நிரம்புவதற்கு 8லீற்றர் 450மில்லிலீற்றர் நீர் தேவை. அதில் 2லீற்றர் 475 மில்லிலீற்றர் நீர் உள்ளது எனின் பாத்திரம் நிரம்புவதற்கு இன்னும் எவ்வளவு நீர் தேவை?

.....லீற்றர் ..... மில்லிலீற்றர்.

11. 

1) இவ்வுருவில் உள்ள வடிவத்தினை சதுரமாக மாற்றுவதற்கு அதன் அகலப்பக்கத்துடன் எத்தனை சென்றிமீற்றரை சேர்க்க வேண்டும் .....


2) தயார் செய்த சதுரத்தின் சுற்றளவு எத்தனை சென்ரிமீற்றர்? .....

12. 

அன்னாசிப்பழத்தின் நிறை எத்தனை கிலோகிராம் ஆகும்.

..... கிலோகிராம்.

13. ஒரே அளவான நான்கு முக்கோண வடிவங்களைக் தயாரிக்ககூடிய திண்ம வடிவம் எது? .....

14.  இவ் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

.....

(34புள்ளிகள்)

www.ksedu.lk

(14) மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

01. இலங்கைக்கே உரிய தாவரம்?

1) அகத்தி 2) நிலவேம்பு 3) நெல்லி 4) தேயிலை

02. மருந்தாக பயன்படுத்தும் தண்டு வகைகளில் ஒன்று?

1) நன்னாரி 2) மரமஞ்சள் 3) கருவப்பட்டை 4) ஆமணக்கு

03. காற்றின் மூலம் பரவலடையும் வித்துக்கள்

1) புளி, ஆமணக்கு 2) அச்சு , வேங்கை 3) பாக்கு, தேங்காய் 4) முருங்கை, அகத்தி

04. சோடியாக சூழலில் நடமாடுவது

1) கிளி 2) செண்பகம் 3) மைனா 4) காகம்

05. இலங்கையின் மிக உயரமான மலை

1) பம்ரகந்தை 2) லக்ஷபான 3) பீதுருதாலகாலை 4) சீகிரியா

06. நாம்புவ பயன்படுவது

1) மட்பாண்டம் செய்வதற்கு 2) சூடு மிதிப்பதற்கு

3) இரத்தினக்கல் தெரிந்து எடுப்பதற்கு 4) மணலை சளிப்பதற்கு

07. பலகையை அழுத்தமாக்குவதற்கு உதவுவது

1) உளி 2) சீவுளி 3) துறப்பணம் 4) குறடு

08.  உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கப்படும் பெயர்.

1) மிதுனம் 2) இடையன்

3) துலா 4) தேள்

09. மணமற்ற மலர் எது?

1) போகன்விலா 2) பவளமல்லிகை 3) மல்லிகை 4) ரோஜா

10. இலங்கைகுரித்தான முளையூட்டி விலங்கு

1) சருகுமான் 2) ஏகதேசத்தவளை 3) கொம்பு ஓணான் 4) றம்பெல்லா நத்தை

11.தாதுசேன மன்னன் கட்டுவித்த குளம்

1) அபயவாவி 2) மின்னேரியா 3) கலாவாவி 4) கிரிதலைக்குளம்

12. துன்ஹிந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ள மாவட்டம்,

1) மொனராகலை 2) நுவரெலியா 3) பதுளை 4) இரத்தினபுரி

13. விரைவாக உக்கலடைவது

1) யோகட்கோப்பை 2) ரெஜிபோம் 3) தாவரப்பகுதிகள் 4) செங்கற்துண்டுகள்

14. விற்றமின் அதிகம் இருக்கும் உணவு

1) போஞ்சி 2) கடலை 3) சோயா 4) வற்றாளை

15. மின்சமிக்ஞை பலகையில் பச்சை நிற மனிதன் ஒளிர்வதால்,

1) பாதசாரிகள் பாதையை கடக்கக்கூடாது 2) சாரதிகள் வாகனத்தை செலுத்தலாம்.

3) பாதசாரிகள் பாதையை கடப்பது அபாயகரமானது 4) சாரதிகள் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

16. ஏப்ரன் ஒன்றை சுற்றி வர ஓரத்தை தைப்பதற்கு ஏற்ற தையல் வகை

1) சங்கிலித்தையல் 2) கம்பளித்தையல் 3) புள்ளடித்தையல் 4) நரம்புத்தையல்

